www.tamilarangam.net





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழ்ஒளி தொலைக்காட்சி

Eutelsat Hotbird 3
Position: 13 East
Polorization: Horizontal
Transpoder 77
Digital Transmission
Encoding : Viaccess
Frequncy: 12245 MHz
Decoder: Xcom CD 200, Nokia 9600S or

Subscription for Month 149 FFr





---

காலை 8.00 மணிமுதல் நள்ளிரவு 12.00 மணி வரை தமிழ் நிகழ்ச்சிகள்

நள்ளிரவு 12.00 மணி முதல் காலை 8.00 மணிவரை இந்தியாவிலிருந்து தூரதர்ஷன் நிகழ்ச்சிகள் நேரடி ஒளிபரப்பு

---

# தமிழ்ஒலி வானொலி




24/24 மணி நேர ஒலிபரப்பு
தினமும் மாலை 5.45 — 6.15 வரை பிபிசி தமிழோசை
இரவு 12.00— காலை 6.00 கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்ஒளி

# இது உங்கள் சஞ்சிகை

ஜூன் 1998

'ஈழநாடு' பத்திரிகையை ஆரம்பித்த பின்னர்தான் பத்திரிகை ஒன்றின் தேவைக்காக எமது மக்கள் எவ்வளவு ஆவலுடன் இருந்தார்கள் என்பதை அறிய முடிந்தது.

பத்திரிகை ஆரம்பிக்க இருப்பது குறித்த துண்டுப்பிரசுரங்களைப் பார்த்துவிட்டு எம்மிடமே சிலர் ''எத்தனை வாரம் வெளியிடுவார்களோ தெரியவில்லை'' என்று விமர்சித்தவர்களும் உண்டு.

அப்போது—

அதாவது பத்திரிகையை ஆரம்பிப்பதற்கு முன்னர் இவ்வாறு கிடைத்த விமர்சனங்கள் மனதில் பலத்த பயத்தை ஏற்படுத்தியது உண்மையே.

ஆனால் பத்திரிகையின் முதலாவது இதழ் வெளிவந்த பின்னர் எமக்குக் கிடைத்த உற்சாகமான வரவேற்பும்—

வாசகர்கள் அளித்த ஆதரவும்—

இன்று ஐரோப்பாவில் மாத்திரமன்றி தமிழீழத்திலிருந்து புலம்பெயந்து தமிழ்மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் இதயநாதமாய் ஒலிக்கின்றது.



அதுபோலவே—

ஐரோப்பிய வான் அலைகளில் தமிழ்ஒலிக்க ஆரம்பித்த பின்னர் தான் அதன்தேவையை—

நமது மக்களுக்கு வானொலி ஒன்றின் தேவை எவ்வளவு அவசியமாக இருந்தது என்பதை அறிய முடிந்தது.

ஐரோப்பிய வான் அலைகளில் தமிழை ஒலிக்கவைக்க எமக்கு உற்சாகமூட்டியவர்கள் பலர்.

அவர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் இங்கே பெயர் குறிப்பிடாவிட்டாலும்—

எங்கள் இதயங்களில் வாழும் அவர்களுக்கு நன்றிகூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அடுத்தது—

நாம் அடிக்கடி கூறுவதுபோல, தமிழ்ஒலியைக் கேட்கும் எமது நேயர்களும், தமிழ்ஒளியைப் பார்க்கும் நேயர்களும் எங்கள் சாதாரண நேயர்களாக மாத்திரமன்றி, தமிழ்ஒளிஒலிக் குடும்பத்தில் ஒருவராகவே நாம் கருதுகின்றோம் என்பது உங்களுக்குத் தெரியாததல்ல.

ஒரு குடும்பத்தில் உள்ள ஒருவர் தவறுசெய்தால் அதனைத் தட்டிக்கேட்கவேண்டியது குடும்பத்தில் உள்ள மற்றவர்களின் கடமை என்பதை நாம் இங்கே குறிப்பிட்டாகவேண்டியது அவசியமல்ல. அது உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்கும். அதனை நீங்கள் உரிமையுடன் செய்யவேண்டும் என்று வேண்டுகின்றோம்.

இனி சஞ்சிகைக்கு வருவோம்.

இது உங்கள், வானொலி — தொலைக்காட்சிக்கான சஞ்சிகையே என்பதை முதலில் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

உங்கள் வானொலியில், தொலைக்காட்சியில் ஒலிஒளி பரப்பப்படும் நிகழ்ச்சிகள் பற்றிய விமர்சனங்கள், கருத்துப்பரிமாற்றங்களுக்காகவே இது வெளியிடப்படுகின்றது. இது முதலாவது இதழ் என்பதால் உங்கள் கலைஞர்கள் பற்றிய அறிமுகத்தையே முதன்மைப்படுத்தியிருக்கின்றோம். உங்கள் குடும்ப உறுப்பினர்களை நீங்கள் நன்றாக தெரிந்துவைத்திருக்க வேண்டும் என்பதால்.

அடுத்துவரும் இதழ்கள் நிகழ்ச்சி நேர அட்டவணைகள், நிகழ்ச்சி பற்றிய விமர்சனங்களுடன் வெளிவரும்.வானொலியில் நாம் முன்வைக்கும் சமூகப்பிரச்னைகள் பற்றிய வாதப்பிரதிவாதங்களை இந்தச் சஞ்சிகையினூடாகவும் நீங்கள் தொடரலாம்.

திரைப்படப் பாடல்களை ஒலிபரப்புவதற்கு மாத்திரமே வானொலி என்றால் அதற்கு நாம் உடன் பட்டவர்கள் அல்ல.

எமது மண்ணை— மக்களை— நேசிக்காதவரை எந்த முயற்சியானாலும் விழலுக்கிறைத்த நீர்தான். விழலுக்கு நீர் இறைக்க நாம் தயாராக இல்லை.

சரி, இது உங்கள் சஞ்சிகை. எங்கே உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

—குகநாதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும்'

ஐரோப்பிய வான் அலைகளில் ஒலிக்க ஆரம்பித்த தமிழ்ஒலி வானொலி இப்போது உலகம் முழுவதிலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

முதலில் கனடாவில் ஒலிக்க ஆரம்பித்து இன்று இன்ரர்நெற் வாயிலாக உலகம் முழுவதிலும் ஒலித்துக்கொண்ருக்கிறது.

விரைவில் தாயகத்தில் வன்னிக் காடுகளிலும், மரநிழல்களிலும் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களையும் சென்றடையவிருக்கிறது.

அவர்களின் உறவுப் பாலமாக நிச்சயம் தமிழ்ஒலி ஒலிக்கும் என்பது எமது நேயர்கள் அறியாததல்ல.



தமிழ்ஒலியை ஆரம்பித்த போது இவ்வளவு விரைவாக இப்படியெல்லாம் சாதிக்க முடியும் என்று நாம் நினைத்திருக்கவில்லை.

அதாவது, இவ்வளவு விரைவாகவே தமிழ்தொலைக்காட்சியை ஆரம்பிப்போம் என்றோ அல்லது அது இவ்வளவு விரைவாக உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களால் பேசப்படுமளவிற்கு வளர்ச்சியடையும் என்றோ நாம் நினைத்திருக்கவில்லை. ஆனால் இன்று அது நடந்துகொண்டிருக்கின்றது.

எமது எதிர்காலச் சந்ததி தமிழ்மொழியையோ, எமது அடையாளங்களையோ மறந்துவிடாமல் இருக்க தமிழ்ஒலியும் தமிழ்ஒளியும் உதவும் என்பது நாம் எதிர்பார்த்த ஒன்றுதான். ஆனால் பல தசாப்தங்களுக்கு மேலாக தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து இன்று தமது அடையாளங்களையே இழந்துபோயிருக்கும் மக்களுக்கும் நமது சேவை எட்டும் என்று நினைத்திருக்கவில்லை.

மொறிசியஸ் நாட்டில் தமிழ்ஒளி தினமும் ஐந்து மணி நேர நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதன் மூலம் அந்தப் பணியைச் செய்ய ஆரம்பித்திருப்பது இரட்டிப்பு நிறைவைத் தருகிறது.

அதுபோல தமிழ்ஒளி இன்னும் உலகெங்கும் சிதறுண்டு வாழும் தமிழ் மக்கள் மத்தியில் தனது பணியை விரிவுபடுத்தும் என்பது நிதர்சனம்.

தமிழ் ஒலிக்கு தமிழோசை கிடைத்ததுபோல தமிழ்ஒளிக்கு சன் ரிவி கிடைத்தது எமக்குப் பெருமை சேர்த்த விடயங்கள்.

ஒலிபரப்புத் துறையில் பிபிசி ஒரு சிகரம். இதனுடன் இணைய முடிந்தது எமக்கு பெருமை. அதுபோலவே சன் ரிவி தமிழ்த் தொலைக்காட்சிகளுக்கெல்லாம் தந்தை போன்றது. அதனுடன் இணைய எமக்கு சந்தர்ப்பம் கிடைத்ததும் மற்றுமொரு பெருமையே.

இவ்வாறு—

தமிழ்ஒலி, தமிழ்ஒளி ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பின்னால் பலர் நிற்கின்றார்கள். அவர்கள் அனைவரும் உங்களுக்கு இன்று மிக நன்கு அறிமுகமானவர்களாகி விட்டார்கள். அனைவருமே தம் குடும்பங்களை மறந்து, தமது சுய தேவைகளை மறந்து வானொலிக்காகவும் தொலைக்காட்சிக்காகவும் உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

வானொலியை ஆரம்பித்த போது அது ஒரு சுமையாக இருக்காது என்பதை நிர்வாகத்தில் இருந்த அனைவருமே உணர்ந்திருந்தார்கள். எம்முடன் இணைந்த ஒலிபரப்பாளர்களைப் போல, இயக்குனர்சபையில் இடம்பெற்றவர்களும் வானொலியை நடாத்துவதில் சிரமம் இருக்கும் என்று கருதவில்லை. ஆழம் அறிந்தே காலை விட்டவர்கள் என்பதால்...

ஆனால் தொலைக்காட்சியை ஆரம்பித்தபோது ஆழம் தெரிந்திருந்தாலும் அது சற்று கூடுதலான ஆழம் என்பதால் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கவேண்டியதாயிற்று.

ஆனாலும் அவற்றை எதிர்கொள்ளும் தன்னம்பிக்கை எமது இயக்குனர்களுக்கு இருந்ததால் இன்று ஓராண்டை எட்டிப்பிடித்து வெற்றிநடைபோடுகின்றது. இதுவரை ரிஆர்ரி எட்டிய சாதனைகள் எல்லாம் சாதாரணமானவையே இன்னும் நிரம்ப உண்டு. அவற்றையெல்லாம் எட்டுவோம் என்ற நம்பிக்கையும் உண்டு.

ஈழத்திலிருந்தும் தமிழகத்திலிருந்தும் புலம்பெயந்து வாழுகின்ற தமிழ் மக்கள் அனைவரையும் சென்றடைவதுடன் நின்றுவிடாது அவர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு பாலமாகவும் தமிழ்ஒளி நிச்சயம் இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் அழுத்தி உரைக்க விரும்புகின்றேன்.

**த. சந்திரகுமார்**
(Administrative Director)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்ணின் குரல்

வானொலியில் பவனி வரும் பெண்ணின் குரல்
வாரந்தோறும் உங்களை வந்து சேரும் குரல்
ஆண் பெண் சமத்துவத்தினை — வான்
அலைகளினுடாக வலியுறுத்தும் குரல்
ஆளுமை மிக்கவர்களாக இருந்தும் — பெண்கள்
அனைத்திலும் ஆண்களையே சார்ந்திருக்கும்
அறியாமை அகற்ற அகிலமெங்கும்
ஆணுக்குப் பெண் அடிமையில்லை என்று நிரூபிக்க
அழகு தமிழில் பவனி வரும் குரல் இது
அன்போடு பரிந்துரைக்கும் குரல்
அறிவோடு அலசிப்பார்க்கும் குரல்
ஆற்றலோடு எடுத்துரைக்கும் குரல்
ஆயுதமாய் கனன்றெரியும் குரல்
பெண்ணின் குரல் என்பது
பெண்களின் பெருமை பற்றி
பறை சாற்றும் குரலல்ல
பெண்களின் பிரச்சனை பற்றி
ஆராச்சி செய்யும் குரல் — இது
ஆண்களுக்கு எதிரான குரலல்ல
அனைவரும் சமமென்று வலியுறுத்தும் குரல்
பெண்ணின் குரல்
பெண்களின் பேதமை அகற்றும் குரல்
எனவே இது உங்கள் குரல் — பிற்போக்காளர்களின்
ஊதுகுழலல்ல
முற்போக்குக் கருத்துக்களை முரசறையும் குரல்
பெண்களே குரல் கொடுங்கள்
ஆற்றலோடு நீங்கள் எழுந்துவிட்டால்
மாற்றம் வரும் என்பதில் என்றேனும்
மாற்றுக்கருத்துக்கிடமுண்டோ?

- வித்யா

# விழித்தெழுவீர்!

கூனிக்குறுகி
குனிந்து நிலம் பார்த்து
ஏணிப்படிகளாகி
ஏக்கத்தை உடமையாக்கி
வாழ்ந்து மடிந்த கதை
வழக்கொழிந்து போனதின்று
நாணித் தலைகவிழ்ந்து
நாளெல்லாம் தொலைந்து போக
வாரித் தலை முடித்து
வடிவழகு பார்ப்பதெல்லாம்
வீணிற் கழித்ததென்றோர்
கூட்டமாய் எழுந்து விட்டால்
பாரதி கண்டு சொன்ன - பெண்
இன்றே விழித்தெழுவாள்
ஆணுக்குப் பெண் என்றும்
அடிமை என்று சொல்லிவைத்த
வீணர்க்கு ஒன்றுரைப்பீர்!
விடிவெள்ளி முளைக்கின்ற
வானத்தில் எமது கைகள்
தூரிகையாய் மாறியொரு
புது உலகை வரைந்து நிற்கும்

- வித்யா

# கோணேஸ்வரிகள். . .!

நேற்றைய அவளுடைய சாவு — எனக்கு
வேதனையைத் தரவில்லை.
மரத்துப்போய்விட்ட உணர்வுகளுக்குள்
அதிர்ந்து போதல் எப்படி நிகளும்.

அன்பான என் தமிழச்சிகளே
இத்தீவின் சமாதானத்திற்காய்
நீங்கள் என்ன செய்தீர்கள்!?
ஆகவே வாருங்கள்
உடைகளைக் களற்றி
உங்களை நிர்வாணப்படுத்திக்கொள்ளுங்கள்
என் அம்மாவே உன்னையும் தான்

சமாதனத்திற்காய் போரிடும்
புத்தரின் வழிவந்தவர்களுக்காய்
உங்கள் யோனிகளைத் திறவுங்கள்
பாவம்,
அவர்களின் வக்கிரங்களை
எங்கு கொட்டுதல் இயலும்!

வீரர்களே! வாருங்கள்
உங்கள் வக்கிரங்களை தீர்த்துக்கொள்ளுங்கள்
என் பின்னால் என் பள்ளித்தங்கையும் உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்
அவளோடு நின்று விடாதீர்!
எங்களோடு யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி துளிர் விடக்கூடும்
ஆகவே,
வெடிவைத்தே சிதறடியுங்கள்
ஒவ்வோரு துண்டுகளையும் கூட்டி அள்ளி
புதையுங்கள்
இனிமேல் எங்கள் இனம் தளிர் விட முடியாதபடி.

சிங்களச்சகோதரிகளே!
உங்கள் யோனிகளுக்கு
இப்போது வேலையில்லை.

- கலா

(17 .05. 1997 அன்று பத்துப்பொலிசாரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு, பெண்குறியில் கிரனைட் வைத்துக்கொல்லப்பட்ட மட்டக்களப்பு 11ம் கொலனியைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய்)

நன்றி : சரிநிகர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுவர் முற்றம் திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள்!



9 வயதுக்கு உட்பட்டோர்
பிரிவு 4 —1வது பரிசு
பிரசாந்தி சுப்பிரமணியம்
ஜேர்மனி
பிறந்த திகதி: 26.05.1989



9 வயதுக்கு உட்பட்டோர்
பிரிவு 3
ராஜ்நிஷாந்தி ராஜலிங்கம்
சுவிஸ்
பிறந்த திகதி: 03.05.1990



6 வயதுக்கு உட்பட்டோர்
பிரிவு 1
1 வது பரிசு— விவேக் சந்திரன்
சுவிஸ். பிறந்த திகதி: 14—09—1993



நிரோஜா கருணாநிதி
Kauffmann str5/1
74074 Heilbronn
Germany
6 வயதிற்குட்பட்டோர்
பிரிவு 1
1வது பரிசு



ஜோசலின்
அகல்யா பாக்கியநாதன்
சுவிஸ்
பிறந்த திகதி:
29.06.1992
6 வயதிற் உட்பட்டோர்
பிரிவு 2
1வது பரிசு



12 வயதுக்கு உட்பட்டேர்
பிரிவு 5
1வது பரிசு சஞ்சீஸ்
யோகநாதன்
சுவிஸ்
பிறந்த திகதி: 23.09.1988

## திருக்குறள் போட்டி

புலம் பெயர்ந்து வந்த பெற்றோர்கள் சரி, பிள்ளைகள் சரி, தமிழ் , தமிழ் இனம் என்னும் உணர்வினை தங்களுக்குள் தாமே வளர்த்துக்கொள்ளவேண்டும். இது TRT யின் அவா, என்று சொல்வதனைக்காட்டிலும் அபிலாஷை என்பதே மேல்.

கிட்டத்தட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்துகொள்ளும் சிறுவர் முற்றம் நிகழ்ச்சியில், மனனத்தை அடிப்படையாக வைத்து கருத்து என்னும் கருதுகோளை எம்மவர் மத்தியில் வியாபிக்கவேண்டும் என்கிறநோக்கில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சி இது. இதில் வெற்றிதோல்விக்கு இடமில்லை. பிள்ளைகளின் திறமை, சாதுர்யம் போன்ற பல்வேறு சமுதாய வார்ப்புகளை வைத்தே திறமை கணிக்கப்பட்டது. எது எப்படியிருப்பினும் TRTயின் தமிழ் வளர்ப்பு முயற்சி இளஞ்சிறார்களின் நெஞ்சங்களை தொட்டுவிட்டது.

www.tamilarangam.net



12 வயதுக்கு உட்பட்டோர்
1வது பரிசு
சிந்துஜா செந்தில்குமார்
இத்தாலி



மிதுரன் தில்லைநாதன்
ஜேர்மனி
பிறந்த திகதி:
22.08.1991
9 வயதுக்கு உட்பட்டோர்
பிரிவு 3
1வது பரிசு



தமயந்தி சத்தியநாதன்
ஜேர்மனி
பிறந்த திகதி:
18.12.1989
9 வயதுக்கு உட்பட்டோர்
பிரிவு 4
1வது பரிசு



6 வயதுக்கு
உட்பட்டோர் பிரிவு 2
1 வது பரிசு
சுஜிந்தா
மணிவண்ணன்
சுவிஸ்
பிறந்த திகதி:
08.04.1992



ஆரணி வாகீசர்
சுவிஸ்
பிறந்த திகதி:
24.01.1996



ஜெனனி ஜெயக்குமார்
டென்மார்க்
பிறந்த திகதி
:18.09.1994

## விசேடபரிசு பெறும் இரண்டு குழந்தைகள்

ரேடியோ ஆசியாவின் தமிழ் ஒலியில் சிறுவர்முற்றம் நிகழ்ச்சியை நடத்துவதில் பெரும்மகிழ்ச்சி அடைகிறேன். பல நூற்றுக்கணக்கான குழந்தைகள், ஐரோப்பிய நாடுகள் முழுவதிலுமிருந்து பங்குபற்றி வருகிறார்கள். அனைத்துக்குழந்தைகளும் மிகவும் ஆர்வமாக இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பிப்பதைப்பார்க்கும்போது இந்த நிகழ்ச்சியானது அனைத்துக்குழந்தைகள் மனதிலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்றுதான் கூறவேண்டும். ஐரோப்பிய மண்ணிலே வாழ்கின்ற குழந்தைகள் தாங்கள் வாழ்கின்ற நாட்டின் மொழியினையே தாய்மொழியாகவும், முதன்மொழியாகவும் கொண்டுள்ளனர். தமிழ் மொழியனை தங்கள் பெற்றோர்களிடமும் அல்லது தமிழாலயங்கள், போன்ற நிலையங்களிலுமே படிக்கக்கூடிய வசதியினைப்பெறுகின்றனர். இத்தகைய வசதிகளும் ஒருசில குழந்தைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றது. காரணம் பல பெற்றோர்களுக்கு இங்குள்ள இயந்திரத்தனமான சூழ்நிலையாலும் , பொருளாதார நெருக்கடிகளினாலும் குழந்தைகளுக்கு மொழியறிவினை ஊட்டுவதற்குரிய நேரமின்மையால், குழந்தைகளுடன் தங்கள் நேரத்தைப்பகிர்ந்துகொள்ளமுடியாமல் திண்டாடிக்கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சில பெற்றோர்கள் தம் குழந்தைகளுடன் சொந்த மொழியில் உறவாடாமல் தாம் வாழுகின்ற நாட்டு மொழியுடனேயே உரையாடுகின்றனர். இதனால் குழந்தைகள் தமிழை பேசும் வாய்ப்பை இழந்து விடுகின்றனர். ஆனால் இன்று ஐரோப்பிய மண்ணில், வானொலிகளின் தோற்றம், இன்று குழந்தைகள் ஓரளவு தமிழ் அறிவினை வளர்த்துக்கொள்ள உறுதுணையாக இருக்கின்றது என்றே கூறலாம். செவிப்புலன் வாயிலாக, குழந்தைகளைச்சென்றடையக்கூடிய வகையில், அவர்களுக்குப்பாடல்களினூடாக, கதைகளினூடாக, எமது வானொலியினூடாக தமிழினை சொல்லிக்கொடுப்பதன் மூலம் ஏனைய ஊடகங்களை விட வானொலியானது குழந்தைகளைப்பொறுத்தமட்டில் முக்கியம் பெறுகின்றது எனலாம். இந்தச்சேவையினை TRTயின் தமிழ் ஒலியில், சிறுவர் முற்றம் நிகழ்ச்சி மூலம் தொடர்ந்து நடாத்துவதற்குரிய ஒத்துழைப்பினை குழந்தைகளும் , பெற்றோர்களும் தருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. எமது மொழியினை மறக்காத ஒரு எதிர்காலச்சந்ததியினரை உருவாக்கவேண்டியது நம் ஒவ்வோருவரினதும் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**சிறுகதை: செ. யோகநாதன்**

# சரஸ்வதி

மூச்சுமுட்டுகிறாற்போல இருந்தது கண்கள் நொந்து எரிந்தன. தொண்டைகட்டிக்கொண்டாற்போல வலித்தது. சரஸ்வதி மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள்.திறந்திருந்த கதவின் வழியாக வெளியே பார்தாள். வட்டுக்கருகி மொட்டையாக நின்றன செவ்விளநீர் மரங்கள். வீட்டின் முன் பக்கத்திற்கு குளிர்மை தந்த வேப்பமரம் சரிந்து கரிகிப்போய நின்றது. ஒற்றையான காகம் மௌனமாக உட்காந்திருந்தது. அங்குமிங்கும் தலையைச்சரித்து அச்சமாகப் பார்த்தது. தண்ணீர்க்குடத்துடன் வெளிப்படலையைத்திறந்து கொண்டு உள்ளே வந்த மகேஸ்வரி, சரஸ்வதியைப்பாத்து பரிவோடு கேட்டாள்.

ராசாத்தி இப்ப எப்படியிருக்குது ?

சரஸ்வதி கண்கள் பனிக்கத் தாயைப் பார்த்தாள்.

சளித் தொல்லை தாங்க முடியலை...

மூக்கை உறிஞ்சிக் கொண்டதாள் அவள்.

ஒருக்கால் வேது பிடிச்சால் சளி எடுபட்டிடும். நானும் எல்ல இடமும் இல்லை தேடித் திரிஞ்சன் கிடைக்கேல்லை. ஏதாவது தைலம் பூசலாமென்றால் அதுக்கும் வழியில்லை.

மகளின் அருகே உட்கார்தாள் மகேஸ்வரி. தலையைத் தொட்டாள் கலங்கிச்சிவந்த மகளின் கண்களையும் முகத்தையும் ஏக்கத்தோடு பார்த்து பெருமூச்சு விட்டாள். எவ்வளவு செழுமையாக அழகாயிருந்த இளம் பூ உடலே வதங்கியவள் போல சோர்வோடு இருந்தாள். தகப்பனைப்போல உற்சாகமானவள், தகப்பனின் அவலப்பிரிவு அவளை எப்படி ஆக்கிவிட்டது...

வெளியே இருந்து வீசிய அக்கினிக்காற்று அறையினுள்ளே தகித்தது. முகத்தையும், உடலையும் எரித்தது. காற்றிலே தலையை வலிக்கச் செய்யும் ரசாயணப்புகையின் மணம்.

''தண்ணீர் கொஞ்சம் கொடுங்க என்றாள் சரஸ்வதி.''

''சுட வைச்சுத்தாறன். கொஞ்சம் பொறுங்க...''

அவசரமாக அடுப்பிற்கு அருகே சென்றாள் மகேஸ்வரி. ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த காஸ் சிலிண்டர், மின் அடுப்பை வெறுமையாகப் பார்த்தாள். அவை பாவனை இன்றித் துருப்பிடித்துப் போயிருந்தன. மன்சாரம் நிறுதத்தப்பட்டு எத்தனை நாட்களென்பதே அவளுக்கு மறந்து போய்விட்டது.

தீக்குச்சி உரசி அடுப்பை பற்ற வைத்தாள்.

வீதியில் ஜீப் உறுமும் சத்தம் கேட்டது.

அவசர் அவசரமாய் எழுந்து போய் அறைக் கதவை முக்கால்வாசி மூடிவிட்டு வெளியே பார்த்தாள். உடைந்து தகர்ந்து வெளி மதில் வழியாக வெறிச்சோடிய குண்டும் குழியுமான தெரு தெரிந்தது. யாழ்ப்பாணத்தில் நுழைந்த படை முதலில் செய்த வேலை வீதியோரமாக இருந்த வீடுகளின் மதிற்சுவரை கூடியவரை அடித்து த் தகர்ததே பாதுகாப்புக் காரணங்களுக்காக வீடுகளையும் உடைத்து துள்ளுங்கள் என்று படையினருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

''அம்மா...''

''என்னடா அது?''

நெகிழ்வான குரலில் கேட்ட படி தாய், மகளின் அருகே சென்றாள்.

''யோகம், தங்கம்மாக்கா ஒருத்தரும் வரவில்லையோ?''

முகம் சுருங்கிற்று மகேஸ்வரிக்கு. நெஞ்சை என்னவோ அடைத்தாற்போல உணர்ந்தாள். கண்கள் கலங்கின. எவ்வளவு குளிர்மையாக இருந்த தெரு இது... அடர்ந்து சடைத்த வேப்பமரங்கள்.முற்றங்களில் வாசனை கமழும் மல்லிகையும், அரளிச் செடியும், பசிந்தளிரோடு மாமரங்கள், கிணற்றடியைச் சுற்றி செழித்த வாழையும், பப்பாசி மரங்களும் தமது அளவற்ற பிள்ளைகள் புடைசூழ இப்போது? வரண்டு நிலம் பிளந்து நெருஞ்சி முள் படர்ந்த முரட்டுத்தெரு.

''அம்மா...''

யோசனை கலைந்து மகளைப்பார்த்தாள் தாய் கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டாள்.

''என்னடா?''

''அழுகிறியளோ''

முகத்திலே வரண்ட அமைதியை உண்டாக்க முயற்சித்தாள் முடியவில்லை. வருவித்த புன்னகையோடு ''கண்ணுக்குள்ளே தூசி விழுந்து விட்டுது'' என்றாள்.

சரஸ்வதி உள்ளங்கையைப் பார்த்து கொண்டே சொன்னாள். அம்மா பிறந்து வளந்த மண்ணிலேயே இருக்க வேணுமென்று சொல்லி இஞ்சை வந்தது பிழையென்று நினைக்கிறேன்.ஐயாவும் அநியாயமாய் போயிட்டர்.

பெரு மூச்சு விட்டாள் மகேஸ்வரி.

''எவ்வளவு சனம் தங்களின்ரை வீடு வாசலை எல்லம் விட்டிட்டு காட்டுக்குள்ளை போய் இருக்குது. தங்களின்ரை கஸ்ரங்களை முணு முணுக்காமல் மன இறுக்கத் தோடை சீவிக்குது...''

தொண்டைக்குள் முட்கள் நிறைந்து இறுகுவது போல சரஸ்வதிக்கு நோவு எடுத்தது. வேதனையோடு தொண்டையிலிருந்து நெஞ்சு வரை தடவி விட்டுக் கொண்டாள். முகம் வேதனையில் சுருங்கிற்று.

தாய் அடுப்பின் பக்கம் சென்றாள்.

மனதை அச்சமூட்டுகின்ற மௌனம் எங்கும் விரிந்திருந்தது. முன் பாயின் பக்கத்திலுள்ள பிள்ளையார் கோயிலில் ஐந்து வேளையின் பூஜை மணி இன்னிசையாய் விரிந்து கேட்கும். எந்நேரமும் சின்னஞ்சிறு குருவிகள் மழலைக்குரலில் பேசிக்கொண்டிருக்கும். மாமரங்களிலிருந்து கூவிக்கொண்டிருக்கும் குயிலுக்கு தமது பிஞ்சுக் குரலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தைகள் கூகூ என்று பதில் சொல்லிக் கொண்டிருப்பார்கள். இவை எல்லாவற்றையும் மெல்லிய காற்று தொட்டு தொட்டு தன்னோடு நண்பராய் கொஞ்சத் தூரத்திற்கு கூட்டிச்செல்லும். சரஸ்வதி அங்கே வந்ததும் முதலில் சென்றது. பிள்ளை .பிள்ளை பிள்ளை பிள்ளையார் கோவிலிற்குத்தான்.

பிள்ளையார் கோவிலைத் தூர இருந்து கண்டபோதே அவள் அதிர்ந்து போய்விட்டாள். கோயிலின் இடதுபுறமிருந்த பூந்தோட்டம் 'ஷெல்' விழுந்து எரிந்து கருகிப்போயிருந்தது. மிகப்பெரிய வில்வ மரமும் தேக்கும் எரிந்து உயிரிழந்து சரிந்து கிடந்தன. பிள்ளையார் கோயில் மூலஸ்தானம் முற்றிலும் உடைந்து கோயிலினுள் கரும்புகை மண்டிக்கிடந்தது. மூலஸ்தானத்துள் ஒளிந்திருந்த அணிற்பிள்ளைகள் சுறுசுறுப்பு மறைந்து மெதுவாக உள்ளே ஒடுங்கின.

"சரஸ்வதி தலையில் அடித்துக்கொண்டே விம்மி விம்மி அழுதாள். கடவுளே உமக்கு இப்படி ஆனால் இனி எங்களுக்கு யார் துணை?" உடைந்து இரண்டாக கிடந்த கொடிக் கம்பத்தின் அருகே நின்ற மகேஸ்வரி அதிர்ந்து போய் நின்றாள். பயங்கரவாதிகளிடமிருந்து மக்களைக் காப்பாற்றப் போகிறோம் என்று உலகத்திற்கு அறிவித்துவிட்ட ஆக்கிரமித்திருக்கிறவர்கள் எதை சிதைக்காமல் விட்டிருக்கிறார்கள்?.

சரஸ்வதி கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவலம் நிறைந்த முகம் கோபத்தில் சிவக்கத்தொடங்கிற்று. ஆனால் காற்றில் கந்தகப்புகை மணந்தது.

கோயிலை விட்டு வெளியே வந்தபோது இராணுவ வாகனம் ஒன்று நின்றது.

அந்த வழியாக வந்த மக்களை வரிசையாக நிற்கச் சொன்னார்கள்.

இரண்டு அடையாள அட்டைகளும் இருக்கிறதா என்று ஒவ்வொருவரையும் கொச்சையாக கேட்டு வாங்கிப் பார்த்தார்கள்.

ஒன்று இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, மற்றது அவர்கள் அந்தப் பகுதியில் வாழ்கின்ற தமிழர் என்பதைக் குறிக்கின்ற அடையாள அட்டை.

சரஸ்வதியின் அருகே வந்த சிப்பாய் அவளின் உள்ளங்கையைக் காட்டும்படி சிங்களத்தில் கூறினான். அவள் ஒன்றுமே பேசாமல் நின்றாள். அப்போது அவளின் அருகே வந்த இன்னொரு சிப்பாய் தடித்த குரலில் "சிங்களங் தெரியாதுங்?" என்றான். அவள் அதற்கும் பேசாமல் நின்றாள். மீண்டும் முதலாவது சிப்பாய்,

சைகை மூலம் அவளின் உள்ளங்கையைக் காட்டச் சொன்னன். சரஸ்வதி வேண்டா வெறுப்பாய் உள்ளங்கையை நீட்டிக்காட்டினாள்.

"கொட்டியாத?" என்றான் அவன்.

அவள் பேசாமலே நின்றாள்.

அவள் உள்ளங்கையைப் பார்த்தால் துப்பாக்கி ஏந்திப் பயிற்சி பெற்றதுபோல தெரியவில்லை என்று முதல் சிப்பாய் மற்றவனிடம் சொன்னான்.

மற்றவன் முதலாம் ஆளுக்கு கூறினான்.

இரண்டாயிரம் வருஷமாகப் பிடிபாடத யாழ்ப்பாணத்தை இப்போதுதான் பிடித்திருக்கிறோம்.

இனி இவர்கள் நமது அடிமைகள். எமது மொழியையும் கலாச்சாரத்தையும் இவர்கள் கைக் கொள்ளும் விதத்தில் நமது நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

சிங்களத்திலே சொல்லிக் கொண்டு போனான் சரஸ்வதியை அங்கிருந்து போகும்படி சைகை செய்தான்.



அங்கு திரும்பி வந்த அடுத்த நாளே சரஸ்வதிக்கு உடல் நலமின்றிப் போய்விட்டது. மனதின் குழப்பமும் பலவீனமும் உடல்நலனைச் சிதைத்து விட்டதை அவளே உணர்ந்து கொண்டாள். யாழ்ப்பாணம் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டதை ஏற்றுக் கொள்ளாத நாலரை லட்சம் மக்கள் காடுகளில் அடைக்கலம் புகுந்தனர். சரஸ்வதியும், மகேஸ்வரியும் அப்படிப் புறப்பட்டபோது வாத நோயால் அவதிப்பட்ட திருநாவுக்கரசு அவர்களோடு வர மறுத்துவிட்டார்.

"என்னவானாலும் நான் என்னுடைய மண்ணிலைதான் சாவேன். அதைவிட என்னாலை இரண்டு அடிகூட நடக்க முடியாது மகள் நீ அம்மாவையும் கூட்டிகொண்டு போயிடடா"

சரஸ்வதி எவ்வளோ கெஞ்சினாள்.

"மகள் இந்த சண்டையெல்லாம் எத்தினை காலத்திற்கு நடக்கப் போகுது. நீங்க சுருக்கா வெளிக்கிட்டுப் போங்க..."

மகேஸ்வரியும், சரஸ்வதியும் நெஞ்சு கனக்க அங்கிருந்து புறப்பட்டனாப்.

சரஸ்வதி தளதளத்தக் குரலிலே "ஐயா நாங்க உங்களைப் பார்க்க கெதியிலை வந்துடுவோம்" என்றாள். அங்கிருந்து வெளியேறி காட்டில் மரங்களுக்குக் கீழே வாழ்ந்த அவல வாழ்வின் ஒவ்வொரு நிமிஷமும் திருநாவுக்கரசு பற்றிய நினைவே அவர்களைக் கொத்திக்குதறிக் கொண்டிருந்தது. அவர்களின் கண்ணெதிரிலேயே நோய்க்கு மருந்தின்றி இறந்து போனவர்களைப் பார்த்துப் பார்த்து அவர்கள் விம்மி விம்மி அழுதானர்.

கொஞ்ச நாளில் காட்டிலிருந்து சிலர் மீண்டும் யாழ்ப்பாணம் புறப்பட்ட போது அவர்களின் மனம் ஊசலாடிற்று. துணிச்சலுக்கு தம்மை ஆட்படுத்திக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர். ஆனாலும் மனதினுள்ளே இனந்தெரியாத சுமை. ஊரினுள் நுளைந்த போது மனம் துண்டு துண்டாக உடைந்து போயிற்று.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழியெல்லாம் உடைந்து சூறையாடப்பட்ட வீடுகள். எரிந்து கருகிய மரஞ்செடிகள். பாழ் வெளியாய் மாறிப்போருந்தது. அவர்களின் அழகான ஊர். விஷப்புகை சேர்ந்து வீசும் நாசமாகிப்போன காற்று.

வீட்டு வாசலில் நுழைந்து கருகிய சூழலைத் தாண்டி இருவரும் திருநாவுக்கரசுவைத் தேடினார்கள்.

கிணற்றடியில் நாற்றம் வீசிற்று. அழுகிச் சிதைந்து போய் கோரமாகத் திருநாவுக்கரசுவின் பிணம். தாயை கண்கள் மின்னிடப் பார்த்தாள் சரஸ்வதி.

''அம்மா...''

''என்னடா...''

நூறு நாள் அடிமையாக குனிந்து வாழுறதை விட ஒரு நிமிஷம் சுதந்திரமாக வாழ்கின்ற வாழ்க்கை தான் மரியாதையானது...''

''மெய்தான்'' என்றாள் மகேஸ்வரி.

''அந்நிய ஆதிக்கத்திலை எல்லாம் இழந்து அடிமைகளாய் இருக்கிறதைவிட காட்டின் நடுவிலை சுதந்திரமாக தலை நிமிர்ந்து இருக்கலாம் ஐயா இந்த மண்ணிலை அடிமையாகவே செத்துப்போமிட்டார் நாங்கள் அப்படி இருக்க வேண்டாம்.''

உதடுகள் நடுங்கிட மௌனமாய் இருந்தாள் தாய். வெளியே ஜீப்பின் சத்தம்.

மகேஸ்வரி அச்சத்தோடு மகளைப் பார்த்தாள். சரஸ்வதியின் பார்வையில் நிதானம்.

கதவைத்திறந்து கொண்டு உள்ளே வந்தான் ஒரு சிப்பாய். விகற்பமாய் அவர்களைப் பார்த்தான்.

''இன்குவரிறக்கு வரணுங்...''

சரஸ்வதி இடுப்பில் தீப்பெட்டியை லாவகமாக மறைத்து வைத்தாள்.

நோயெல்லாம் நீங்கியது போல தைரியமாக நின்றாள் சரஸ்வதி.

''ஒன்றுக்கும் பயப்பிடாமல் வாருங்க.. இதை நான் நேற்றே எதிர் பார்த்தேன்'' என்றாள் அவள்.

கதவை திறந்து கொண்டு தாயும் மகளும் வெளியே சென்றனர்.சிப்பாய் பின்னலே வந்தான். ஜீப்பில் இன்னொருவன் மட்டுமே.

சரஸ்வதியின் அமைதியும் நிதானமும். ஜீப்பின் பின்புற இருக்கையில் தாயும் மகளும் ஏறிக்கொண்டனர். சிப்பாய்கள் முகத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி.

ஜீப் திருப்பத்தில் திரும்பிய போது தன் காலடியில் இருந்த பெற்றோல் ரின் மூடியை மெதுவாகத் திறந்தாள் சரஸ்வதி. ஒருகணம் தான். ரின்னிலிருந்து பெற்றோலை வேகமாக அவர்கள் மீது ஏற்றிவிட்டு இடுப்பிலிருந்து தீப்பெட்டியை எடுத்து தீக்குச்சியை உரசி அவர்கள் மீது வீசினாள்.

ஜீப் முற்றிலும் பற்றியெரிந்தது. சிப்பாய் ஓலமிட்டுக் கதறினர்.

அந்தத் தீயின் தணணென்ற குளிர்மையை உணர்ந்தாள் சரஸ்வதி.

---

# ரிஆர்ரி இயக்குநர்சபை உறுப்பினர்கள்



படத்தில் வலமிருந்து இடமாக:

எஸ்.எஸ்.குகநாதன், த. சந்திரகுமார், சிவகுரு பாலச்சந்திரன், எஸ்.சிறிதரன், இரத்தினம் கந்தசாமி, எஸ். அரவிந்தன், மணிவேல் மலோன்.

படத்தில் இல்லாதவர்கள்:

விமல் சொக்கநாதன், ஈழகேசரி ராஜகோபால், என். உருத்திரமூர்த்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய சகாப்தம்



1959 ஆம் ஆண்டு ஈழநாடு வாரப்பத்திரிகையாக வெளிவரத்தொடங்கியது.
1960 ஆம் ஆண்டு அது வாரம் இருமுறை வெளிவரும் பத்திரிகையானது. 60ம் ஆண்டின் இறுதியில் பிந்திய பதிப்பு என்றும் விஷேச பதிப்பு என்றும் வாரத்தில் ஐந்து ஆறுநாட்கள் வெளிவந்தது.
1961 ஆம் ஆண்டு பெப்ரவரி 11 இல் ஈழநாடு தினசரிப்பத்திரிகையின் முதல் இதழ் வெளிவந்தது.
24மணிநேரம் தொடர்ந்து உழைத்தும் எதிர்பார்த்தபடி அதிகாலையில் முதல் இதழை வெளியிடமுடியாமல் போய்விட்டது.
நண்பகலில்தான் பத்திரிகை வெளிவந்தது.
ஒரு தினசரிப்பத்திரிகையை யாழ்ப்பாணத்தில் அச்சேற்றிவெளியிடுவது எவ்வளவு சிரமம் என்பதை அச்சக ஊழியர் முதல் நிர்வாகமும் முதல்தடவையாக உணர்ந்தது!
ஈழநாடு தினப்பதிப்பு வெளிவரத்தொடங்கிய இருவாரங்களில் தந்தைசெல்வநாயகம் தலைமையிலான இலங்கை தமிழ்அரசுக்கட்சி யாழ்ப்பாணம் கச்சேரியின் வாசலில் சத்தியாக்கிரகம் ஆரம்பித்தது.
தினப்பதிப்பை சிரமத்துடன் வெளிக்கொணர்ந்தபோதிலும் சத்தியாக்கிரகம் ஆரம்பமான மதியம் விஷேசபதிப்பு வெளியிடவேண்டும் என்று நான் விரும்பினேன்.
இது முடியுமா? என்று எல்லோரும் கேட்டார்கள். டாக்டர் சண்முகரத்தினம் எனது விருப்பத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். ஆனாலும் அவருக்கும் சிறிது சந்தேகம்தான். என்னை உற்சாகப்படுத்தினார். தனது ஈ. என். 9151 பச்சைநிற கொன்சல்காரை, எனது உபயோகத்திற்கும் தந்தார். காலையில் சிறப்புப்பதிப்புக்குரிய உள்நாட்டு வெளிநாட்டுச்செய்திகள் சிலவற்றைக்கொடுத்துவிட்டு டாக்டரின் காரில் கச்சேரிக்கு சென்றேன். அங்கு சத்தியாக் கிரகிகளுடன் பொலிசார் மல்லுக்கட்டி நிற்பதையும் பிரதான வாசலில் தந்தை செல்வநாயகம் உட்கார்ந்திருக்க அவரிடம் பொலிசார் நெருங்காமல் தொண்டர்கள் உட்கார்ந்தும் படுத்தும் சூழ்ந்திருக்க பொலிசார் பரிதவித்துத் தொண்டர்களை வெளியே இழுப்பதும் உடன் மற்றவர்கள் அந்த இடத்தை நிரப்புவதுமாக இருந்த காட்சிகளைப்பார்த்தேன். பழையபூங்கா வாசலில் டாக்டர் **E.M.V** நாகநாதன் பொலிசாருடன் மல்லுக்கட்டி நிற்பதையம் பார்த்தேன். உடன் அலுவலகம் திரும்பி இவற்றையெல்லாம்எழுதிக்கொடுத்து அச்சுக்கோர்க்கச்சொல்லிவிட்டு , தினப்பத்திரிகையின் மறுநாள் பதிப்புக்கான வேலையையும் கவனித்துவிட்டு மீண்டும் கச்சேரிக்குச்சென்றேன். அங்கே அதே காட்சிதான். அரச அதிபர் ஸ்ரீகாந்தா பழைய பூங்கா வாசலாலும்சரி, கச்சேரி வாசலாலும் சரி வெளியே வரமுடியாதபடி இருந்தார். பொலிஸ் அதிகாரிகள் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்தனர். நண்பகலில் பதிப்பு வெளியிடவேண்டும். காலம் போய்க்கொண்டிருந்தது. நமது நிருபராக இருந்த ஸி. ரி. சொலமன் மாஸ்ரரிடமும், வீரகேசரி நண்பர் எஸ். செல்லத்துரையிடமும் ஏதாவது விஷேசமென்றால்

## எங்கள் கலைஞர்

### முகத்தார் எஸ். ஜேசுரட்ணம்



எந்த ஒரு கலைஞனுக்கும் மற்றவர்கள் பாராட்டும் ஒவ்வோருவார்த்தையும் உற்சாகமூட்டும் வார்த்தைகளாகவே அமையும். மண்ணில் கிடைக்கும் கற்களுக்கு பட்டைதீட்ட அது வைரமாக ஜொலிப்பதுபோல ஒரு கலைஞனுக்கு கிடைக்கும் பாராட்டும் பட்டமும் அந்தக் கலைஞனை ஜொலிக்கவைக்கிறது.

அண்மையில் ஜேர்மனி இரங்கும் இல்லம் அமைப்பாலும் ஈழநாடு பத்திரிகை ஸ்தாபனத்தாலும் கலைமாமணி பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டவர் முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் அவர்கள். அதற்காக பாரிஸ் கலைஞர்களால் பெரிய பாராட்டுவிழாவும் சிறப்பாக நடாத்தப்பட்டது.
கலை மாமணி விருதினை விட முகத்தார் என்ற இவரது நாடகப்பாத்திரமொன்றின் பெயர்தான் மிகப்பெரிய பட்டமாக இவருடன் ஒட்டிக்கொண்டு முகத்தார் ஜேசுரட்ணமாக ஒலிக்கிறது.

முகத்தார் வீடு, சண்டியன் சின்னத்தம்பி, போன்ற நாடகங்கள் மூலம் இலங்கையில் புகழ்பெற்றவர். வாடைக்காற்று திரைப்படத்தில் பொன்னுக்கிழவனாகத்தோன்றி சக கலைஞர்களையே கலங்கடித்தவர். இப்போது T.R.T. யின் தமிழ் ஒலியில் வில்லங்கம் செல்லப்பாவின் தொடராக ஜஆர்சி செல்லப்பா, ஆடுவெட்டிசெல்லப்பா, கப்டன்செல்லப்பா, என பல நடகங்களை செல்லப்பா என்னும் தலைப்பிலேயே தயாரித்தளித்து வருகின்றார். அது மாத்திரமல்ல பாரிஸ் புது மாப்பிளையை தமிழ்ஒலிநேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள்

### அப்புக்குட்டி T. ராஜகோபால்



இவரின் சொந்த இடம் யாழ். ஆனைக்கோட்டை.
இலங்கை வானொலியில் யாழ்ப்பாணத்தமிழை ஒலிக்கவைத்து சாதாரண பேச்சுத்தமிழையே வானொலிநாடகத்தின் மையக்கருவாக வைத்து சாதனை படைத்தவர் அப்புக்குட்டி ராஜகோபால். கலையரசு சொர்ணலிங்கம்' நடிகமணி வி.வி. வைரமுத்து ஆகியோருடனும் இணைந்து பலநாடகங்களில் நடித்திருக்கின்றார்.
இவர் நடித்த கோமாளிகள், ஏமாளிகள், திரைப்படங்கள் தமிழ் மக்களின் கவனத்தை கவர்ந்தவை.இலங்கை இந்திய கூட்டுத்தயாரிப்பான நெஞ்சுக்கு நீதி திரைப்படத்திலும் நடித்த இவர் கொலோனியஸ் மோட்மோர்ஸ் லிமிட்டட்டில் வர்த்தக முகாமையாளராக பணிபுரிந்தவர்.
இன்று தமிழ் ஒலி ஒலிபரப்புக்கட்டுப்பாட்டாளராக பணியாற்றுகிறார்.

சர்வதேச கோமாளிகள் என்ற பெயரில் வாராவாரம் வலம்வந்து நேயர்களை மகிழ்ச்சிவெள்ளத்தில் மிதக்கவைக்கும் இவர் ஏராளமான நாடகங்களை பிரதியாக்கம் செய்து நெறிப்படுத்தியும் வருகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பி. லோகதாஸ்.



இவர் வெறும் நடிகர் மட்டுமல்ல, கவிதை, சிறுகதைகள் எழுதுவதிலும் ஆர்வமுள்ளவர். இவர் எழுதி இயக்கிய நீந்தத்தெரியாத மீன்கள் வீடியோ திரைப்படம் இவரது நண்பர்கள் வட்டத்துள் பரபரப்பாகப்பேசப்பட்ட ஒன்று.
பல்குரல் செய்வதிலும் ஆற்றலுள்ளவரான இவர் தமிழ் ஒலியில் அறிவிப்பாளராக மட்டும் நில்லாது இலக்கிய ஒலி நிகழ்சியை தயாரித்து வழங்குகின்றார். இசையும் கதையும் நிகழ்ச்சியில் குரல்கொடுத்து நேயர்களை மகிழ்விக்கின்றார். தமிழ் ஒலியில் ஒலிபரப்பாகும் பலநாடகங்களிலும் நடித்து தன்திறமையை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறார்.

## திரு. ஞானம் பீரிஸ்



ஐரோப்பாவின் முதல் தமிழ் வீடியோ பட தயாரிப்பாளர்.

இன்று ஐரோப்பாவில் பல தமிழ் வீடியோப்படங்கள் வெளிவந்து பல கலைஞர்களின் திறமைகளை வெளிச்சம்போட்டுக்காட்டியிருந்தாலும் அதன் விதையாக இருந்த இவரை நாம் மறந்துவிடமுடியாது.
1985ம் ஆண்டு தனிப்புறா, என்ற முதல் தமிழ் வீடியோ படத்தை தயாரித்தவர். அப்படத்திற்கு திரைக்கதை வசனம் எழுதி இயக்கியவரும் அவரே.

தனிப்புறாவைத் தொடர்ந்து விடுதலைப்பாதையிலே, நீ ஒரு தெய்வம், ஆகிய வீடியோ படங்களையும் தயாரித்து வெளியிட்டிருக்கிறார்.
தனது திரைப்பட தயாரிப்பு அனுபவங்களை தமிழ் ஒளியிலும் பகிர்ந்துகொண்டுவரும் திரு. ஞானம் பீரிஸ் அவர்கள், தமிழ் ஒளி ஐரோப்பாவில் தயாரிக்கும் நிகழ்ச்சிகளின் ஒளிப்பதிவாளராக கடமையாற்றிவருகிறார்.

## பிலிப்தேவா

சிறந்த அறிவிப்பாளரான பிலிப்தேவா பாரிஸில் 1990 ம் ஆண்டுமுதல் இனிக்கும் இரவு என்ற பெயரில 15 கலைவிழாக்களை நடாத்தி, திறமை இருந்தும் அரங்கு கிடையாத பலகலைஞர்களை அரங்கேற்றி அவர்கள் திறமைகளை மக்களுக்கு வெளிச்சம்போட்டுக்காட்டியவர்.

பாரிஸ் வீடியோ மலர் என்ற பெயரில் ஒரு வீடியோ பத்திரிகையை ஆரம்பித்து பலசிரமங்களுக்கு மத்தியிலும் 12 பத்திரிகைகளை வெளியிட்டு சிறந்த பல கலைஞர்களின் படைப்புக்களை ஐரோப்பாவில் உள்ள தமிழ்மக்கள் சின்னத்திரை மூலம் பார்த்து பரவசமடைய வைத்திருக்கிறார். மேடை நாடகங்கள் பலவற்றிலும், ஐரோப்பாவில் தயாரான வீடியோ திரைகாவியங்களான ராஜாவின் ராகங்கள், படத்தில் முக்கிய பாத்திரத்திலும், மௌனம், படத்தில் கதாநாயகனாகவும் நடித்து மக்களின் மனதில் இடம்பிடித்துக்கொண்ட கலைஞர்.
இப்பொழுது தமிழ் ஒலி-ஒளி செய்திவாசிப்பாளராகவும், கனடா நேரம், பிரான்ஸ்நேரம் போன்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பாளராகவும் பணிபுரிகிறார்.



உடன் போன் செய்யும்படி சொல்லிவிட்டு அலுவலகம் திரும்பினேன். சிறிதுநேரம் கழித்து சொலமன் மாஸ்ரரும் நண்பர் செல்லத்துரையும் போன் செய்து சத்தியாக்கிரகிகள்மீது இலேசான தடியடிப்பிரயோகமும் பின்னர் ஆகாயத்தை நோக்கித்துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்ற சம்பவத்தையும் இத்துடன் முதல்நாள் சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்டதாக தந்தைசெல்வா அறிப்பதாகவும் சொன்னார்கள்.

இதற்கிடையில் காலைச்செய்திகளை வைத்து பக்கத்தை முடித்து மெஷினில் ஏற்றுவதற்கு தயாராக இருந்தேன். இச்செய்திகள் கிடைத்ததும் முதற்பக்கத்தில் பாதிச்செய்தியாக இவற்றைச்சேர்த்து அவசரஅவசரமாக மெஷினில் ஏற்றி பத்திரிகை அடிக்கத்தொடங்கினோம். கடைத்தெருவிலிருந்து பத்திரிகை ஏஜென்டும் வந்திருந்தார். பத்திரிகை அடித்துக்கொண்டிருக்கும்போதே நூறுபிரதிகளை அவர் எடுத்துச்சென்றார். கச்சேரி சத்தியாக்கிரகத்தில் கலந்துகொண்டவர்களும் இதை வேடிக்கை பார்க்கத்திரண்டிருந்தவர்களும் பஸ்நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்தனர். ஈழநாடு பத்தரிகை 'சுடச்சுட' விற்பனையாகிக்கொண்டிருந்தது. அதை வாங்கிப்படித்தவர்கள் வியப்படைந்தனர். இப்ப நடந்த விஷயம் உடனேயே ஈழநாட்டில் வந்திருக்கென்று பலரும் பேசிக்கொண்டனர்.
செய்திகளை உடன்தரும் பத்திரிகை மட்டுமல்ல உண்மைச்செய்திகளை அப்படியே தருவதும் ஈழநாடு என்ற பெயரை பெற்றது. இந்த நம்பகத்தன்மையை ஈழநாடு பலவருடம் காப்பாற்றி வந்தது.
இப்பொழுது பாரிஸ் ஈழநாடு இந்தப்பணியைச்செவ்வனே செய்து உலகநாடுகளில் வாழும் தமிழர்களிடம் நற்பெயர்பெற்றுள்ளது யாழ்ப்பாணத்தில் ஈழநாடு பத்திரிகையைத்தொடங்கிய கே.ஸி. தங்கராசா அவர்கள் மட்டக்களப்பு திருகோணமலை ஆகிய கிழக்கு மாகாண தலைநகரங்களிலும் சமகாலப்பதிப்புகளை வெளியிடவேண்டும் என்று கனவு கண்டார். இந்தக்கனவை இப்போது தம்பி குகநாதன் பாரிஸ் ஈழநாடு பத்திரிகையை ஆரம்பித்து பலபடிகள் முன்னேறி அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரெலியா ஆகிய கண்டங்களில் சம பதிப்புகளாக வெளியிட்டு மாபெரும் சாதனையை நிகழ்த்தி வருகிறார். திரு. தங்கராசா அவர்களின் தம்பியார் டாக்டர் கே.ஸி. சண்முகரத்தினம் யாழ்ப்பாணம் நல்லூரில் யமுனாரியில் ஈழநாடு அச்சகத்துடன் ஈழநாடு ஊழியருக்கான குடியிருப்புக்களையும்அமைத்து பெரிய வளாகம் அமைக்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். 1967ம் ஆண்டு அவரின் திடீர்மறைவுடன் இக்கனவுகள் யாவும் பகற்கனவாய் பழங்கதையாய் போயின.
ஆனால் தம்பி குகநாதன் பத்திரிகையுடன் நின்ற விடாது தமிழ் ஒலிபரப்புச்சேவையுடன் இப்பொழுது தமிழ் ஒளிபரப்பு தொலைக்காட்சிச்சேவையையும் திறம்படச்செய்து கடல்கடந்து வாழும் தமிழ்மக்களுக்கு தமிழுலகச்செய்திகளை மட்டுமல்லாது தமிழுணர்வையும் தமிழீழமக்களின் விடுதலைஉணர்வையும் எடுத்து ஊட்டி புதிய சகாப்தத்தையே படைத்துவருகிறார். பத்திரிகை ஜாம்பவான்கள் என்று இந்தியாவில் கோயங்கா போன்றோரைச்சொல்வார்கள். தம்பி குகநாதனை யாருடனும் ஒப்பிடமுடியாது. இந்த நூற்றாண்டில் குகநாதனின் சேவைக்கும் ஆற்றலுக்கும் யாரும் இணையில்லை என்பதை தமிழ்கூறும் நல்லுலகம் சொல்லும்!

திரு. குகநாதனின் பணி மேலும் விரிவடைந்து பரந்து பரவவும் அவர் பணிமேலும் மேலும் சிறக்கவும் இறைவனை வேண்டுகிறேன்.
வளர்க, வாழ்க தம்பி குகநாதனின் பணி என வாழ்த்தும்
அன்பன்

**எஸ். எம். கோபலரத்தினம் (கோபு)**

**(முன்னாள் யாழ் ஈழநாடு ஆசிரியர்)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தினம் ஒரு திருக்குறள்.

வாழ்வியலை எதிரொலிக்கும் ஒரு நூல் உலகில் உண்டென்றால் அது திருக்குறள்தான். கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்றுவகை காலத்தையும் முரண்படாத வகையில் வாதிட்டுச்சொல்லிக்கொண்டிருக்கும் நூலாக இது இருப்பதால்தான் உலகில் பலமொழிகளிலும் இது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனை எத்தனைபேர் சரியாகப்புரிந்து கொண்டிருப்பர். இதன் இன்றைய கால அவசியம் என்ன என்பதனால்தான் "தினம் ஒரு குறள்" என்னும் நிகழ்ச்சி இடம்பெறுகிறது.

தினம் ஒரு நிகழ்வு எங்களது வாழ்க்கையில் நடைபெறுவதும், அதைச்சரியாக - தர்மநெறியில் உணராமல், சீர்தூக்கிப்பார்க்க முடியாதநிலையில் சமூகமும், அறநெறியில் செயற்படுத்தமுடியாமல் அரசும் இப்படித்தவிப்பது கண்கூடு. இதனால் இந்நிகழ்ச்சியின் அவசியம் ஏற்படுகிறது.

குறளுக்கு விளக்கம் சொல்வது வேறு, எத்தனையோ உரைக்கற்கள் எழுந்திருந்தாலும் ஒரு புதிய அணுகுமுறை , புதிய கருத்துரை - பழைமைகள் தோற்கடிக்கப்பட்டு புதிய வெற்றியுடன் நிகழ்கால சம்பவங்களோடு இக்குறளுக்கு உரை வழங்குவது என்பது சதாரணவிடயமல்ல.
ஆனால் அது நடைபெறுகிறது. நாளாந்தம் எங்கள் வாழ்க்கையில் நடைபெறுகிறது. அதுவே குறளாக 'தினம் ஒரு குறளாக" வெளிவருகிறது. எமக்குத்தேவையான புதிய கருத்துக்கள் வெளிவருகின்றன.

பேராசிரியர் சாலமன் பாப்பையாவை இன்று இலக்கிய உலகில் தெரியாதவர்கள் இல்லை. பட்டிமன்றம், வழக்காடுமன்றம், இலக்கியப்போர் இவைகளில் இவரின்பெயரே முதலாய் வருகின்றது. அவரது நடைமுறை வழக்கு, எளிய தமிழ்நடை, இலகுவில் புரிந்துகொள்ளவைக்கும் திறன்இவைகளைத்தன்வசமாக்கிக்கொண்ட பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் நடைமுறைவழக்கோடு கூடிய கருத்துக்கள், புரியாத குறளுக்கும் புதுப்புது அர்த்தத்தைக்கூறிவருகிறது. தினம் ஒரு குறள் பயன்பாட்டிற்காக வருகிறது. பயன்படுத்தவேண்டியது எமது பொறுப்பு.

-கீழ்க்கரவை பொன்னையன்

## ஏ. எஸ். ராஜா



இலங்கை வானொலியில் புகழ்பெற்ற அறிவிப்பாளர் மதுரக்குரல் மன்னர் கே.எஸ் ராஜாவின் குரலுக்கு மயங்கா ரசிகர்களே இருந்திருக்கமுடியாது என்றே கூறலாம். இலங்கையில் மட்டுமல்ல கடல்கடந்தும் தமிழர்கள் வாழும் நாடுகளிலெல்லாம் கூட அவருக்கு ரசிகர்கள் இருந்திருக்கிறார்கள்.
இன்று அந்த ராஜா உயிரோடு இல்லை.

ஆனால், அதே ராஜாவின் குரலோடு தமிழ் ஒலியில் ஒரு மதுரக்குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அந்தக்குரலுக்குச் சொந்தக்காரர்தான் ஏ.எஸ். ராஜா.

யாழ்ப்பாணம் வேலணையைப்பிறப்பிடமாகக்கொண்டவர் இந்த ஏ. ஸ்ரீஸ்கந்தராஜா. இன்று தனது குரலை வான் அலைகள் மூலமாக ஐரோப்பா மட்டுமல்ல றேடியோ ஆசியாவின் கனடிய ஒலிபரப்பு மூலமாக கனடிய தமிழ் மக்களையும் கவர்ந்திழுத்திருக்கின்றார்.
தமிழ் ஒலியில், காலைத் பூந்தென்றல், பழமை என்றும் இனிமை, TOP-6, நீங்களும் பாடலாம் போன்ற பல நிகழ்ச்சிகளை தொகுத்தளித்துக்கொண்டிருக்கிறார்.

## திருமதி ஏஞ்சலா ஜேக்கப்

நல்ல குரல் வளம் நிகழ்ச்சி அறிவிப்பில் முறையான ஏற்ற இறக்கம் இரண்டும் ஒருங்கே இவருக்கு அமைந்ததால் இவருடைய தயாரிப்பில் ஒலிபரப்பாகும் இசையும் கதையும் நிகழ்ச்சி நேயர்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ் ஒலியில் செய்தி வாசிப்பவர்களில் ஒருவராகவும் இருக்கும் திருமதி ஏஞ்சலா அவர்கள் மன்னாரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

## திருமதி லூமினா



ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் பிரான்சில் அரச காரியாலயங்கள், வைத்தியசாலைகளில் மொழிப்பிரச்சனை காரணத்தால் அவதிப்படும் பல தமிழ் மக்களுக்கு மொழித்துணை நிற்பவர்.
தமிழ் ஒலியில் வானொலி நாடகங்களிலும் குரல் கொடுத்துவருகிறார்.

## திரு. முரளிதாஸ்

தமிழ் ஒலியின் ஒலிப்பதிவு தொழில்நுட்பவியலாளர் இவர். யாழ். மாவட்டம் அனலைதீவை பிறப்பிடமாகக் கொண்ட இளைஞர் இவர். பாடசாலையில் படிக்கும் காலத்திலேயே வானொலி மெக்கானிக் பற்றி படித்தவர். பிரான்ஸ் வருகைக்குப் பின் றேடியோ பிரான்சில் 83 யூன் முதல் 85 யூன் வரை இரண்டு வருடங்கள் தொழில் நுட்ப துறையில் உதவியாளராகப் பணியாற்றியவர்.
இன்று தமிழ் ஒலியில் வலம் வரும் சகல நிகழ்ச்சிகளையும் ஒலிப்பதிவு செய்யும் பொறுப்பாளராக இருப்பவர் திரு. முரளிதாஸ்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### அருள் மொழித்தேவன்



யாழ்சுழிபுரத்தைப்பிறப்பிடமாக்ககொண்டவர். அமைதியான சுபாவம். அடக்கமான குணம். அதிகம் பேசமாட்டார். பெயருக்கேற்றாற்போல் 'மொழிமீதும் அதிக பற்று இவருக்கு. TRT யில் அறிவிப்பாளராகக் கடமையாற்றும் இவர், "தனிக்குரல்" "ஜேர்மன் நேரம்" நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகிறார். தானே இசையும் கதையும் எழுதி தனது குரலில் ஒலிப்பதிவுசெய்வதோடு, நாடகங்கள் பிரதியாக்கம் செய்து நடித்தும் வருகிறார்.

### ஆர். ராஜேந்திரம் (டென்மார்க்)



இவர் பிறந்து வளர்ந்தது சண்டிலிப்பாய். கல்வி பயின்றது மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி.

பாடசாலைக்காலத்திலேயே கலை ஆர்வத்தால் உந்தப்பட்டு, நாடகங்கள், மேடைப்பேச்சுக்கள், பட்டிமன்றங்களில் பங்குபற்றிய அனுபவத்தோடு, இலங்கை வானொலியில் திரு. மாதகல் கந்தசாமி, திரு. மதியழகன் போன்றோருடன் இணைந்து சங்கநாதம் நிகழ்ச்சியை தயாரித்து வழங்கியது போன்ற அனுவமும் இன்று TRT யின் தமிழ் ஒலியில் டென்மார்க்நேரம் நிகழ்ச்சியைத் தயாரித்தளிப்பதற்கு பக்கபலமாக இருக்கின்றது.

திரு. ராஜேந்திரம் டென்மார்க் உள்ளூர் வானொலியில் (F.M.) சங்கே முழங்கு என்னும் நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது தமிழ்ஒலியின் 'டென்மார்க் நேரத்தில்' நற்சிந்தனை, பைபிள் நேரம், டென்மார்க் செய்திகள் கதம்ப நிகழ்ச்சிகள் என்பதோடு சிறுவர் நிகழ்ச்சிகளையும் தயாரித்து வழங்கி வருகிறார்.



### ஆஷா. சோழனார்

தமிழ் ஒளியின் பிரதான செய்திவாசிப்பாளராக பணிபுரியும் ஆஷா சோழனார். காரைக்காலைப் பிறப்பிடமாகக்கொண்டவர். வீணை வாத்தியத்தில் ஏழிசை மணி பட்டம் பெற்றவர்.
தமிழ் ஒலியில் சங்கீத கான அமிர்தம் என்ற நிகழ்ச்சியையும் தமிழ் ஒளியில் ராக பந்தங்கள் என்ற நிகழ்ச்சியையும் தயாரித்து வழங்கி வருகிறார்.

### தோழர் சுரேந்திரன்



யாழ். வட்டுக்கோட்டை சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவர்.

உள்ளூராட்சி சபை அதிகாரியாக கடமைபுரிந்த இவரது தந்தையார்

## பெண்ணின் குரல் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்...

ஆண், பெண் என்பது மனிதப்பிறவியின் இரண்டு கூறுகள். இருந்தபோதும் இந்த வேறுபாடு எம்மிடையே எத்தனையோ பிரச்சினைகளை எழுப்புகின்றன. எத்தனையோ பிரிவுகளை ஏற்படுத்துகின்றன. உலகெங்கும் உள்ள ஆண்பெண் என்னும் பிரிவுகள் இயல்பாகவே தமது சமத்துவத்தைப்பேணுகின்றனவா? அல்லது தனித்துவத்தினைக் காக்கின்றனவா? என்றொரு கேள்வியை எழுப்பினால் அதற்கான விடையும் கேள்வியாகவே அமையும் என்பதில் வியப்பில்லை. எம்மைச் சுற்றியிருக்கின்ற வாழ்வின் அர்த்தத்தைத்தேடாமல் அவ்வாழ்வினில் அமிழ்ந்து போய்விடுகின்ற நாம் அதன் மூலம் தற்காலிகமாகக் கிடைக்கின்ற வாழ்க்கை வசதிகள், அற்ப மகிழ்ச்சிகள், போன்றவையே எமது வாழ்வைத்தீர்மானிப்பதாக எண்ணிக்கிறங்கிப் போய்விடுகின்றோம். ஆண்டாண்டு காலமாக பெண்கள் பிரச்சினை என்பதே ஆண்களைக் கவருவதற்கான வழிமுறைகளை ஆராய்வதென்பதற்காகவேதான் அனைவராலும் விளங்கிக்கொள்ளப்பட்டதென்பதனை அனைத்து ஊடகங்களினூடாகவும் அறியமுடிந்தது. கணவரைக் கவருவதெப்படி? என்பதிலிருந்து கண்கள் அழகாக விளங்குவதெப்படி?, கல்யாண வாழ்க்கைக்குரிய கடமைகளைக் கற்றுக்கொள்வதெப்படி?, புகுந்த வீட்டின் பெருமை காப்பதெப்படி?, அடுப்படிக்கலையில் ஆக்கிப்போடுவதெப்படி? என்பது வரை இவைகளே பெண்களுக்கான அறிவு சார்ந்த விடயங்களென எல்லா ஊடகங்களும் பெண்கள் சார்ந்து பெருமையோடு பேசித்தள்ளின.

பின்னர் கால ஓட்டத்தின் வேகம் பெண்களின் பிரச்சினை என்பது முற்போக்கான அனைத்து ஊடகங்கள் மூலமாகவும் அக்கறையோடு அணுகப்பட்டன. இதே வரிசையில்தான் எமது வானொலியிலும் இந்த நிகழ்ச்சியானது ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இன்றும் கூட மாறிவரும் சமுதாய வசதிகளுக்குப் புறம்பாக தமது சிந்தனையை தேக்கி வைத்துக்கொண்டிருக்கும் மாற்றம் காண விரும்பாத மனதுடையார் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் நவீன கருத்துக்களுக்குச்சற்றும் பரீட்சயமில்லாமல் இருப்பதற்கு இவர்களது சமூக வாழ்நிலையே காரணமாகிறது. அனைத்து ஒடுக்கு முறையிலும் பெண் ஒடுக்குமுறை என்பது இன்றைய நூற்றாண்டின் மிகப்பெரிய அநாகரீகம் சமூகத்தின் பல தளங்களிலே , பல வடிவங்களிலே இது நிகழ்கின்றது. இவற்றிலே பல கண்களுக்குப் புலப்படாமலே போய்விடுகின்றன. இதனாற்றானோ என்னவோ எமது பெண்களிலும் அநேகமானவர்கள் பெண் விடுதலை என்கின்ற சொல்லையே அவசியமற்றது என்கின்ற தோரணையில் முகம் சுழித்துப் புறக்கணித்து விடுகின்றனர். பழக்கப்பட்டுப்போன

www.tamilarangam.net

அடிமைச்சுகம், எதற்கும் ஆண்களையே சார்ந்திருத்தல் போன்றன, அவர்களது அகக்கண்களையே திறக்கவிடாது செய்துவிடுகின்றது. ஆளுமை என்பது ஆண்களுக்குரியதொன்றாகவே கருதப்பட்டு அனைத்திலும் அவர்களைச்சார்ந்திருத்தல் என்பது மிகப்பெரியதோர் அந்தஸ்தாகவே பேணப்பட்டு வருகின்றது. இவற்றினை தமக்கு சாதகமாக்கிக்கொண்ட ஆண்களில் பலரோ ஆண்மனோபாவத்தின் உச்சநிலைக்கே சென்று அனைத்தையும் தாங்களே தீர்மானம் செய்துகொள்கின்ற சக்திபெற்றவர்களாக தம்மைக்கருதிச்செயற்பட ஆரம்பித்துவிடுகிறார்கள்.

இவற்றை இனம் கண்டு பெண் என்பவள் தனக்குள்ள ஆளுமையை வெளிக்கொணர, அனைத்துச்செயல்முறையிலுமான தனது கருத்துக்களை தானே வடிவமைத்துக்கொள்ள, தன்னைத்தானே தீர்மானம் செய்கின்றவளாய் மாற்றம் பெறவேண்டும். எமது சமூதாயத்தில் பெண்களின் உண்மையான நிலை, பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகளை அலசுவதற்கு ஏற்ற ஒரு தளமாக அமையவேண்டும். சமூக நலப் பார்வை கொண்ட அனைவரது கருத்துக்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படவேண்டும் என்ற நோக்கிலே இந்நிகழ்ச்சியை நடாத்துகின்றோம்.

பல நேயர்கள் எமக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினைத் தந்தாலும் ஒரு சிலநேயர்களே இதன்நோக்கத்தினை சரியாக விளங்கியுள்ளார்கள் என்பதனை அவர்களது படைப்புக்களிலிருந்து அறிய முடிகிறது. அநேகமான பெண்கள், தமது சிந்தனையில் உதிக்கின்ற கருத்துக்களை சிறுகதைகளாக, கவிதைகளாக, கட்டுரைகளாக, குறுஞ்சித்திரங்களாக, பெண்கள் பிரச்சினை சார்ந்து வெளிப்படுத்தினாலும் சில பிரச்சினைகளை முழுமையாக வெளிப்படுத்தத் தயங்குகிறார்கள். எமது சமூக கலாச்சாரப்பின்னணி, பொருளாதாரப்பிரச்சினைகள் போன்ற பலவிதஅடக்குமுறைகளுக்கு தாம் உட்பட்டுவருவதால் உண்மையை எழுத மறுக்கின்றனர் என்றே சொல்லவேண்டும். பெண் இனத்தின் உரிமைகளை மறுக்கின்ற நாடோ அல்லது சமூதாயமோ அல்லது வீடோ முன்னேற்றம் காணுவதில்லை.

இன்று எமது தமிழ் சமூகத்தை நோக்குகின்றபோது பெண்கள் ஓரளவு விழிப்படைந்துள்ளனர் என்றாலும் முழுமையான விழிப்பு ஏற்படவில்லை என்றுதான் கூறவேண்டும். இந் நிகழ்ச்சியின்மூலம் ஓர் சிறு பொறியை ஏற்படுத்தவாவது எம்மோடு கைகோர்த்து கருத்துச்சரம் தொடுக்க பெண்கள் முன்வரவேண்டும் என்று விரும்புகின்றேன். இதன் மூலம் ஒரு சிறு தாக்கத்தையாவது ஏற்படுத்த முடியுமானால் அதுவே ஓர் மிகப்பெரிய சமூகக்கடமையினை நிறைவேற்றிய திருப்தியை எமக்குத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

**- நவா ஜோதி**

பெண்ணின் குரல் பிரதி
வெள்ளிக்கிழமைகளில்
ஒலிபரப்பாகின்றது

சபாரட்ணம் வயலின், புல்லாங்குழல், ஆர்மோனியம் ஆகிய வாத்தியக்கருவிகளை கையாழ்வதில் வல்லவர். தோல்வாத்தியக்கருவியை கையாள்வதில் வல்லவரான இவரின் துணைவியார் சங்கீதரத்தினம் பட்டம் பெற்றவர். சிவப்புச்சிந்தனைவாதியான சுரேந்திரன் சீனோர் மீன்பிடிவலைத்தொழிற்சாலையில் பணிபுரிந்த காலத்தில் தொழிற்சங்கத் தலைவராக பணியாற்றியவர். இந்தியாவில் ரெக்ஸ்ரைல்ஸ் ரெக்னோலஜி படித்தவர். அமரர். எம். ஜி. ஆரின் அன்புக்கும் பாத்திரமானவர். சிறந்த மேடைப்பேச்சாளர். பட்டி மன்றங்கள், வழக்காடு மன்றங்களில் இவரின் வாதத்திறமை பிரபிரசித்தம் பெற்றவை. T.R.T. யின் தமிழ் ஒலியில் வானொலி நாடகங்களில் நடித்துவருகிறார். தமிழ்ஒலி வானொலிக் குறுக்கெழுத்துப்போட்டியின் தயாரிப்பாளரும் இவர்தான். தர்ஷன் தயாரிக்கும் சகல நிகழ்ச்சிகளுக்குப்பின்னாலும் இவரின் பணி கண்டிப்பாக இருக்கும். தமிழ் ஒளி நிகழ்ச்சிப்பொறுப்பாளர் பணிபுரிகிறார். தமிழ் ஒளியில் ஒளிபரப்பாகும் சகல நிகழ்ச்சிகளும் இவரின் மேற்பார்வையிலேயே ஒளிபரப்பாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## திரு. சிவராம்



இலங்கையில் தயாரிக்கப்பட்ட காத்திருப்பேன் உனக்காக, ஏமாளிகள், அனுராகம் ஆகிய மூன்று திரைப்படங்களின் கதாநாயகன். பாரிஸில் தயாரிக்கப்பட்ட இன்னும் ஒரு பெண் வீடியோ திரைப்படத்தினதும் கதாநாயகன். தமிழ் ஒலியில் மிகப்பழைய பாடல்களைத்தோந்தெடுத்து புதையல் என்ற நிகழ்ச்சியைத்தயாரித்து வழங்கிவருவதோடு வானொலி நாடகங்களிலும் நடித்து வருகிறார்.

## சதீஸ் சகாயராஜ் சூசைதாசன்
## பொன்ராஜா உதயவிசாகன்



இவர்கள் இருவரும் தமிழ் ஒளிக்கு ஒளியூட்டும் தொழில்நுட்பக்கலைஞர்கள். உறக்கமின்றி விழித்திருந்து நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தித்தருபவர்கள். இவர்கள் தமிழ் ஒளியின் கண்கள்.



## நவாஜோதி

மட்டக்களப்பை பிறப்பிடமாகக்கொண்டவர். TRT தமிழ் ஒலியில் அறிவிப்பாளராக, நிகழ்ச்சித்தயாரிப்பாளராக பணியாற்றிவருகிறார்.

இவரது கணவர் திரு. நவா அவர்களும் ஒரு சிறந்த நடிகர். கலை ஆர்வம் மிக்கவர். இவர்கள் புலம்பெயர் சூழலில் வெளிவந்த குறிப்பிடத்தக்க காத்திரமான வீடியோ திரைப்படமான அருந்ததியின் முகம் படத்தின் தயாரிப்பாளர்கள்.



திருமதி நவா ஜோதி மட்டக்களப்பு வின்சென் மகளிர் கல்லூரியில் உயர்கல்விகற்று பொருளாதாரத்துறையில் விஷேட பட்டம்பெற்றவர். தமிழ் ஒலியின் செய்திவாசிப்பாளராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணியாற்றுவதோடு, பெண்ணின்குரல், புதியதோர் உலகம், சிறுவர் முற்றம் போன்ற நிகழ்ச்சிகளைத்தயாரித்து வழங்குகிறார். சிறுவர்முற்றம் நிகழ்ச்சியில் பலசிறுவர்கள் ஆர்வத்தோடு போட்டிபோட்டுக்கொண்டு பங்குபற்றிவருவது இவரது திறமைக்கோர் எடுத்துக்காட்டு. இவர் கர்நாடக சங்கீதத்தினையும் முறைப்படிகற்றுத்தேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இராம ராகுலன்



இயற்கையிலேயே அறிவிப்புத்துறையில் ஆர்வம் மிக்கவரான இவர் தமிழ்ஒலி மூலமாக ஐரோப்பிய நேயர்களுக்கு அடயாளம் காட்டப்பட்டிருக்கிறார். தமிழ் ஒலி வானொலி நாடகங்களில் நடித்துவருவதோடு, சிந்தனையில் உதிர்ந்த முத்துக்கள் என்ற நிகழ்ச்சியினையும் தயாரித்தளித்துவருகிறார்.

### கோவை நந்தன்

சிறந்த அறிவிப்பாளரான இவர் தமிழில் நல்ல வார்த்தைகளை தேடி எடுத்துத்தருவதிலும் திறமையானவர்.

சிறந்த மேடைப்பேச்சாளர். ஈழத்திலும் நன்கு அறிமுகமானவர். தமிழ் ஒலி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னமே 'தமிழ்வானொலி' என்னும் உள்ளூர் வானொலி(FM) சேவையை ஆரம்பித்து பாரிஸ்நேயர்களின் பாராட்டுதலைப்பெற்றவர்.



இன்று தமிழ் வானொலியின் பிரதான செய்தி வாசிப்பாளராகவும், விளையாட்டுத்துறைச் செய்திகளைத் தொகுத்துத்தருவதோடு விவாதஅரங்கு, பட்டி மன்றம் ஆகியவற்றிலும் கலந்துகொண்டு சிறப்பித்து வருகிறார். பலநேயர்களின் பாராட்டுதலைப்பெற்ற அறிவுக்களஞ்சியம் நிகழ்ச்சித்தயாரிப்பாளரும் இவரே.

### தர்ஷன்

TRT தமிழ் ஒலியின் உயிர்நாடி. யாழ். குப்பிளானை பிறப்பிடமாகக்கொண்ட இவர் பிரான்ஸில் நல்ல சம்பளத்தில் பணிபுரிந்த வேலையை உதறிவிட்டு TRT யின் வளர்ச்சிக்காக இரவுபகலாக உழைத்து வருகிறார். கணீரென்ற குரல், திறமையான செயற்பாடு, எடுத்தகாரியத்தை முடிக்கும்வரை கண் உறங்காத கடமை உணர்வு. இவையே TRTக்கும் தர்ஷனதும் வெற்றிக்கு முக்கிய காரணங்கள். தமிழ் ஒலியில் பல நேயர்களின் கவனத்தை ஈர்த்த



குறுக்கெழுத்துப்போட்டியின் சூத்திரதாரியே இவர்தான். தமிழ் ஒளியில் சுவிஸ்நேரம் நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்கி வருகிறார். இன்னும் புதிய புதிய நிகழ்ச்சிகளை உருவாக்கவேண்டுமென ஆர்வம் கொண்டு செயற்பட்டுவரும் இவர் TRT தொழில்நுட்ப உதவியாளரும் கூட.

### சின்னக்குட்டி ரி. தயாநிதி

அப்புக்குட்டி ராஜகோபல் அவர்களின் சகோதரரான இவர் அவரின் குரலை அப்படியே பிரதியெடுத்தது போல வாரிசாக வளர்ந்திருக்கிறார்.

## எதிர்பார்ப்புடன் உலகம்



1998ம் ஆண்டில் உலகத்தைக் கட்டிப்போடப் போகும் நிகழ்வு எதிர்வரும் யூன் மாதம் பிரான்சில் நடைபெறப்போகும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளாகும். அந்த விறுவிறுப்பான நாட்களை நோக்கி தவிப்புடன் நாட்களை எண்ணுகிறார்கள்.

இந்தத்தடவை நடக்கவிருக்கும் உலகக்கிண்ணப் போட்டிகளில்32 நாடுகளின் அணிகள் பங்குகொள்கின்றன. 1994ம் ஆண்டில் அமெரிக்காவில் நடைபெற்ற போட்டிகளில் 24 அணிகள் மட்டும் பங்குகொண்டன. கடந்த தடவை இச்சுற்றுப்போட்டிகளில் 52 போட்டிகள் மட்டுமே இடம்பெற்றன. ஆனால் இம்முறை 64 போட்டிகள் இடம்பெறுகின்றன.1998ம் ஆண்டு உலக மக்கள் சமூகத்தைக் கவர்ந்த நிகழ்வாக இருக்கும் இப்போட்டிகளை உலகெங்குமுள்ள 35 மில்லியன் மக்கள் தொலைக்காட்சி மூலம் பார்த்து ரசிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

1998ம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு 32 அணிகள் தேர்வு பெற்றிருக்கின்றன. இவற்றுள் போட்டி நடக்கும் நாடாகிய பிரான்சும், கடந்த முறை உலகக்கிண்ணத்தை வெற்றிகொண்ட நாடாகிய பிரேஸிலும் தன்னியல்பாகவே தேர்வு பெற்றன. இதர நாடுகளின் அணிகள் 643 போட்டிகளில் பங்குபற்றியே இத்தகமையைப்பெற்றன. இவற்றுள் 228 போட்டிகள் ஐரோப்பாவிலும், 131 போட்டிகள் ஆசியாவிலும், 98 போட்டிகள் Concaf பிராந்தியத்திலும், 72 போட்டிகள் Conmebol பிலாந்தியத்திலும், 23 போட்டிகள் ஒஸியானிக் பிராந்தியத்திலும் நடைபெற்றன. கடந்த தடவை போட்டிக்கு491 தேர்வுப் போட்டிகளே நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. இம்முறை தேர்வுப் போட்களில் 1922 Goal அடிக்கப்பட்டுள்ளன. இத்தேர்வுப் போட்டிகளை 15 மில்லியன் ரசிகர்கள் நேரடியாகப் பார்த்து ரசித்துள்ளார்கள். அதாவது சராசரியாக ஒவ்வொரு போட்டிகளையும் 24 ஆயிரம் பேர் பார்த்து ரசித்துள்ளனர். இப்போட்டிகளில் அதிக எண்ணிக்கையான ரசிகர்கள் பார்த்து ரசித்த போட்டி 1977ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ம் திகதி ஈரானுக்கும், சவுதி அரேபியாவுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியாகும். இப்போட்டியை 1இலட்சத்து 20 ஆயிரம் ரசிகர்கள் பார்த்து ரசித்துள்ளனர். இந்தத் தேர்வுப் போட்டி களில் அதிக goal களை அடித்த நாடு ஈரானாகும் 1978ம் ஆண்டு ஆர்ஜென்றைனாவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளின் பின்பு அதாவது 20 வருடங்களின் பின் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கு பற்ற தேர்வு பெற்றிருக்கும் ஈரான் 17 போட்டிகளில் 57 goal கள் அடித்திருக்கிறது. இத்தேர்வுப் போட்டிகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

அதிக goal களை அடித்திருப்பது ஈரானிய வீரரான கரீம் பாபெரியாகும். 17 போட்டிகளில் இவர் 19 goal களை அடித்திருக்கிறார். யூகோஸ்லாவியாவின் பிறெட்ராக் மிஜரோவிக்கும், ஜப்பானின் கஸ்யோஷி மியூராவும் தலா 14goal களையும், சிலியின் இவன் ஸமோரனோவும், மெக்ஸிக்கோவின் கார்லோஸ் பே்ர்மோஸிலோவும் தலா 12 goal களை அடித்துள்ளனர்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றப்போகும் 32 நாடுகளும் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. குலுக்கல் முறையில் இப்பிரிவுகள் கடந்த டிசம்பர் மாதம் 4ந் திகதி பிரான்சின் மார்ஸெய்ல் (Marseille) நகரில் தெரிவு செய்யப்பட்டன. உலகெங்கும் 500 மில்லியன் மக்கள் தொலைக்காட்சியிலும் பார்த்து ரசித்துள்ளனர். பிரிவுகள் பின்வருமாறு தொடர்கின்றன.

A பிரிவில் இடம்பெறும் நாடுகள் பிரேஸில், ஸ்கொட்லாந்து, மொறோக்கோ, நோர்வே ஆகியன. B பிரிவில் இடம்பெறும் நாடுகள் இத்தாலி , சிலி, கமரூன், ஆஸ்திரியா ஆகியன. C பிரிவில் பிரான்ஸ், தென்னாபிரிக்கா, சவுதி அரேபியா,டென்மார்க ஆகிய அணிகள் இடம்பெறுகின்றன. D பிரிவில் ஸ்பெயின், நைஜீரியா, பராகுவே, பல்கேரியா ஆகிய அணிகள் அடங்கியுள்ளன. E பிரிவில் நெதர்லாந்து, பெல்ஜியம், தென்கொரியா, மெக்சிக்கோ ஆகிய அணிகள் இடம்பெறுகின்றன. F பிரிவில் ஜெர்மனி, அமெரிக்கா, யூக்கோஸ்லாவியா, ஈரான் ஆகிய அணிகளை உள்ளடக்கியுள்ளது. G பிரிவில் ருமேனியா, கொலம்பியா, இங்கிலாந்து துனீஷியா ஆகிய அணிகள் இடம் பெறுகின்றன. H பிரிவில் ஆர்ஜெண்டீனா யப்பான் யமேக்கா குறேஸியா ஆகிய அணிகள் இடம் பெறுகின்றன.

இம்முறை உலகக் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டிகளில் முதலாவது போட்டி Saint Denis இல் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் Stade de France மைதானத்தில் யூன் 10ந் திகதி 17மணி 30 நிமிடத்திற்கு நடைபெறவுள்ளது. கடந்த சம்பியனான பிரேஸிலுக்கும், ஸ்கொட்லாந்துக்குமிடையில் நடைபெறும். இறுதிப்போட்டி Stade de France இல் தேர்வு பெறும் அணிகளுக்கிடையில் யூலை 12ந் திகதி 21மணிக்கு நடைபெறும். புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் Stade de France 80 ஆயிரம் ரசிகர்கள் போட்டிகளைப் பார்க்கும் வசதிகளைக் கொண்டிருக்கின்றது. இங்கு 9 போட்டிகள் நடைபெறவுள்ளன. 2672 மில்லியார்ட் பிராங்குகளில் இவ்வரங்கம் உருவாக்கப்பட்டது. சகல விளையாட்டுப்போட்டிகள் நடக்கும் வசதிகள்கொண்ட இவ்வரங்கம் இசை நிகழ்ச்சிகள் மற்றும் கேளிக்கை நிகழ்வுகள் நடக்கக்கூடிய வகையிலும் வடிவமைக கப்பட்டுள்ளது. போட்டிகளின் கால அட்டவணை பின்வருமாறு தொடர்கிறது.




A பிரிவுக்கான முதலாவது போட்டி Sait Denis இல் உள்ள Stade de France இல் யூன் 10ந் திகதி 17மணி 30 நிமிடத்திற்கு பிரேஸிலுக்கும், ஸ்கொட்லாந்துக் குமிடையில்



ரி. தயாநிதி நகைச்சுவை நடிகா் மட்டுமல்ல ஒரு சிறந்த குணசித்திர நடிகரும் நாடகங்களை எழுதி இயக்குபவரும் கூட. பாரிசில் தயாரிக்கப்பட்ட பல மேடை நாடகங்களிலும் வீடியோ திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.
தமிழ் ஒலியில் இவர் பல நாடகங்களை தயாரித்து வழங்கினாலும் 23 வாரங்களாக இவா் தயாரித்து வழங்கிய புரட்டாத பக்கங்கள் என்ற நாடகம் நேயர்களிடமிருந்து அதிகபாராட்டுதலைப்பெற்றது.



தயாநிதியின் மகன் கௌதமன்.
இவரும் கலைத்துறையில் கால்பதித்து வளர்ந்துவருகிறார். குழந்தை நட்சத்திரமாக பல மேடைகளில், பல வீடியோ நாடகங்களில், திரைப்படங்களில் நடித்துப் பாராட்டுப்பெற்றவர். திரு. தயாளசிங்கம் அவர்களிடம் பரதநாட்டியமும் பயின்றுவருகின்றார். இப்பொழுது தமிழ் ஒலியில் ஒலிபரப்பாகும் பல நாடகங்களில் நடித்து வருகின்றார்.

### பிரியாலயம் துரைஸ்



பிரான்ஸின் முதல் தமிழ் வானொலியின் அறிவிப்பாளர். பாரிஸில் தயாரிக்கப்பட்ட பல வீடியோ திரைப்படங்கள், நாடகங்களில் நடித்துள்ளதுடன் நீதியின் சோதனை, ராஜாவின் ராகங்கள் ஆகிய வீடியோப் படங்களை தயாரித்து இயக்கியுமுள்ளார்.
கிளிநொச்சியைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் இலங்கையில் தயாரான 'சுமதி எங்கே' என்ற திரைப்படத்திலும் நடித்துள்ளார்.
பாரிஸில் வெளிவந்த சிரித்திரு என்ற நகைச்சுவை இதழின் ஆசிரியர். தமிழ்ஒலியின் ஆரம்பகால அறிவிப்பாளர்.

### திரு. சாம்சன்

இவரது சொந்த இடம் கிளிநொச்சி. இவரது தந்தையார் திருச்செல்வம் அவர்களும் புகழ்பெற்ற ஓர் கலைஞர். சிறந்த ஓவியர்.
திரு சாம்சன் பல்துறை ஆற்றலுள்ள ஓர் கலைஞர். நடிகர், ஓவியர், ஒப்பனையாளர், ஒளிப்பதிவாளர், பல்குரல் விற்பனர் எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல நகைச்சுவையாளர். பாரிஸின் அனைத்துக்கலைமுயற்சிகளிலும் இவரது பங்கிருக்கும். சோர்வின்றி, சுறுசுறுப்பாக உழைக்கக்கூடியவர். தரம் விரும்புபவர். இவர் கதாநாயகனாக நடித்த முகம் திரைப்படம் புலம் பெயர் சூழலில் குறிப்பிடத்தக்க பதிவாகியது.



தமிழ் ஒலியின் சிறுவர்முற்ற நிகழ்ச்சியை ஆரம்பித்து தொகுத்து வழங்கி சிறார்களின் மனங்களைக் கவர்ந்தவர்.
தமிழ் ஒளியின் காட்சியமைப்பாளராகவும், ஒளிப்பதிப்பாளராகவும் பணியாற்றிவருகிறார்.

### திருமதி. ஜெயந்தி சாம்சன்.



இசைத்துறையில் அதிகம் நாட்டமுடைய இவர், தமழ் ஒலி-ஒளி அறிவிப்பாளராக பணிபுரிகிறார். தமிழ் ஒலி நாடகங்களில் பங்குபற்றி வருதோடு, சிறுவர் முற்றம், பெண்ணின் குரல், இளமை என்றும் இனிமை ஆகிய நிகழ்ச்சித்தயாரிப்பிற்கு உதவியாளராகவும் பணியாற்றிவருகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திரு. அரசமோகன்



ஏழாலை சைவமகா வித்தியாசாலை அதிபராகக் கடமையாற்றிய திரு.நாவேந்தன் அவர்களின் புத்திரரான திரு. அரசமோகன் அவர்கள், தமிழ்ஒலியில் இனிக்கும் இரவினிலே, இன்றைய நேயர், பன்மொழிப்பாடல்கள், பக்திப்பாடல், சுவிஸ் நேரம் போன்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிவருகிறார்.

## திருமதி வளர்மதி துரைஸ்

திறமையிருந்தும் மேடைக்குவரத்தயங்கும் தமிழ்பெண்கள் மத்தியிலிருந்து, பாரிஸ் கலைத்துறைக்கு, முதல் காலடி எடுத்துவைத்த தமிழ்ப்பெண் என்ற பெருமைக்குரியவராகிறார். பாரிஸில் தயாரான பல வீடியோப்படங்கள், மற்றும் நாடகங்களில் தன் திறமைகளை வெளிக்காட்டி வருகிறார்.



தமிழ் ஒலியில் ஒலிபரப்பான நாடகங்கள் பலவற்றிலும் இவரது குரல் ஒலித்திருக்கிறது.

### பிரியதீபன்

துரைஸ் தம்பதிகளின் அருமை மகனான பிரிய தீபனும் கலைத்துறையில் கால்பதித்து வருகிறார். பாரிஸில் தயாரான வீடியோ படங்கள், நாடகங்களிலும் இவர்பங்கேற்றிருக்கிறார். தமிழ் ஒலி நாடகங்களிலும் குழந்தை நட்சத்திரமாக ஒலித்திருக்கிறார்.



## செல்வி. டிலானி தேவசகாயம்

தமிழ் ஒலியில் வாராவாரம் வலம் வந்துகொண்டிருக்கும் சர்வதேச கோமாளிகள் உட்பட பல நிகழ்ச்சிகளில் உற்சாகத்துடன் பங்காற்றி வருகிறார். பாரிஸில் பல மேடை நாடகங்களிலும் சிறப்புற நடித்திருக்கிறார்.

## யசோதரன் குணரட்ணம்



வயசு 21. கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன். எந்த விடயத்தையும் அமைதியாக, அடக்கமாக துருவி ஆராய்ந்து கற்கும்திறன் வாய்ந்தவர். கடின உழைப்பாளி. TRT யின் முக்கிய உயர்நாடிகளில் இவரும் ஒருவர். அனைவரதும் அன்புக்குப்பாத்திரமான தம்பி யசோதரன் TRT யின் தொழில் நுட்ப துறைக்கு உதவியாளராகவே பணிபுரிய வந்து அதிவிரைவிலேயே தொழில்நுட்பவியலாளராக உயர்ந்துவிட்டவர். தொடந்து கற்கும் ஆர்வம் கொண்டஇவர் TRT யின் நம்பிக்கை ஒளி.

## திருமதி ஞானசீலி ஸ்ரீதர்

யாழ் மாவட்டம் நாவற்குழியைப்பிறப்பிடமாகக்கொண்ட இவரும் தமிழ் ஒலி அறிமுகப்படுத்திய அறிவிப்பாளர்களில் ஒருவர். செய்திவாசிப்பவராக அறிமுகமான இவர் இப்போது அறிவுக்களஞ்சியம், தென்றல் தொடும் நேரம் போன்ற

நடைபெறவுள்ளது. இரண்டாவது போட்டி இதே தினம் 21 மணிக்கு மொன்பெலியேயில் மொரோகோவிற்கும் நோர்வேக்குமிடையில் நடைபெறவுள்ளது. மூன்றாவது போட்டி யூன். 16 செவ்வாய்க் கிழமை 17மணி 30இற்கு ஸ்கொட்லாந்திற்கும் நோர்வேக்குமிடையில் போர்டோவில் நடைபெறவுள்ளது. இதே தினம் 21 மணிக்கு 4வது போட்டி நாந்தில் பிரேஸிலுக்கும் மெறோகோவிற்குமிடையிலான போட்டி நடைபெறவுள்ளது. 5வது போட்டி யூன் 23 செவ்வாய் கிழமை 21 மணிக்கு மார்ஸெயிலில் பிரேசிலுக்கும் நோர்வேக்குமிடையில் நடைபெறவுள்ளது. 6வது போட்டி இதே தினம் இதே நேரம் நாந்தில் சவலிக்கும் கம்ரூனுக்குமிடையில் நடைபெறவுள்ளது.

C பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகளில் முதற் போட்டி 22 யூன் வெள்ளிக்கிழமை 17மணி30இற்கு லான்ஸில் சவுதி அரேபியாவுக்கும் டென்மார்க்குக்குமிடையில் நடைபெறவுள்ளது. இதே தினம் 21 மணிக்கு மார்ஸெய்யில் பிரான்சிற்கும் தென்னாபிரிக்காவுக்குமிடையிலான போட்டிகள் நடைபெறவுள்ளது. 3வது போட்டி யூன் 18 வியாழக்கிழமை 17மணி30இற்கு துலூசில் தென்னாபிரிக்காவிற்கும் டென்மார்க்குமிடையிலான போட்டி நடைபெறவுள்ளது. 4வது போட்டி இதே தினம் 21 மணிக்கு Stade de France இல் பிரான்சிற்கும் சவுதி அரேபியாவிற்குமிடையிலான போட்டி இடம்பெறும். 5 வது போட்டி யூன் 24ந் திகதி16 மணிக்கு லியோனில் பிரான்சும் டென்மார்க்கும் மோதவுள்ளது. இதே தினம் இதே நேரம் போர்டோவில் தென்னாபிரிக்காவும் சவுதி அரேபியாவும் மோதவுள்ளன.




D பிரிவு அணிகளின் போட்டிகள் 12 யூன் வெள்ளிக்கிழமை மொன்பலியோவில் 14.30 மணிக்கு பராகுவேயும் பல்கேரியாவும் பங்கு கொள்ளும் போட்டியுடன் ஆரம்பமாகின்றது. 2 ஆவது போட்டி 13 யூன் சனிக்கிழமை 14.30 மணிக்கு நாந்த்தில் ஸ்பெயினுக்கும் நைஜிரியாவுக்குமிடையில் நடைபெறவுள்ளது. 3 ஆவது போட்டி 19 யூன் வெள்ளிக்கிழமை 17.30 மணிக்கு பாரிஸ் பார்குடி பிரின்ஷில் நைஜுரியாவுக்கும் பல்கேரியாவுக்குமிடையில் இடம்பெறுகிறது. 4 ஆவது போட்டி இதே தினம் 21.00 மணிக்கு சென் எத்தியனில் ஸ்பெயினுக்கும் பராகுவேக்குமிடையில் இடம்பெறுகிறது . யூன் 24 புதன் கிழமை 21.00 மணிக்கு லான்சில் ஸ்பெயினுக்கும் பல்கேரியாவும் மோதும் போட்டி 5 ஆவது, 6ஆவது போட்டி இதே தினம் இதே நேரம் துலூஸில் நைஜுரியாவுக்கும் பராவுகுவேக்கும் இடையில் இடம் பெறுகிறது .

E பிரிவு நாடுகளுக்கிடையிலான போட்டிகளில் முதல் போட்டி 13 யூன் 17.30 மணிக்கு லியோனில் தென்கொரியாவுக்கும் மெக்ஸிக்கோவுக்குமிடையில் இடம்பெறுகிறது. 2 ஆவது போட்டி இதே தினம் 21.00 மணிக்கு Stade de France ல் நெதர்லாந்துக்கும் பெல்ஜியத்திற்குமிடையில் நடைபெறவுள்ளது . 3 ஆவது போட்டி 20 யூன் சனிக்கிழமை 14.30 மணிக்கு போர்டோவில் பெல்ஜியத்திற்கும் மெக்ஸிகோவுக்குமிடையில் இடம்பெறுகிறது . 4 ஆவது போட்டி இதே தினம் 21.00 மணிக்கு மார்செயில் நெதர்லாந்தும் தென்கொரியாவும் மோதுகின்றன . 5 ஆவது போட்டி 25 யூன் வியாழக்கிழமை 16.00 மணிக்கு பாரிஸ் பார்க் டி பிறின்ஸில் பெல்ஜியத்திற்கும் தென்கொரியாவிற்குமிடையில் இடம்பெறுகிறது. 6 ஆவது போட்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதே தினம் இதே நேரம் சென் எத்தியனில் நெதர்லாந்துக்குமிடையில் நடைபெறவள்ளது.

F பிரிவில் அணிகள் பங்கு கொள்ளும் போட்டி விபரங்கள்: முதல் போட்டி யூன் 14 ஞாயிற்றுக் கிழமை 14மணி 30இற்கு சென் எத்தியனில் யூகோஸ்லாவாக்கியாவும் ஈரானும் மோதும் போட்டியுடன் ஆரம்பிக்கின்றது. 2 வது போட்டி 15 யூன் திங்கட்கிழமை 21 மணிக்கு பாரிஸ் பார்க் டி பிரின்ஸில் ஜெர்மனிக்கும் அமெரிக்காவுக்குமிடையில் இடம்பெறுகிறது. 3 வது போட்டி யூன் 21 ஞாயிற்றுக்கிழமை 17மணி30 இற்கு லான் ஸிவ் ஜெர்மனிக்கும் யூக்கோஸ்லாவியாவுக்குமிடையில் நடைபெறவுள்ளது. 4வது போட்டி இதே தினம் 21 மணிக்கு லியோனில் அமெரிக்காவிற்கும் ஈரானுக்குமிடையில் இடம்பெறவுள்ளது. 5வது போட்டி மொன்பொலியோவில் ஜெர்மனிக்கும் ஈரானுக்குமிடையில் இடம்பெறுகின்றது. 6வது போட்டி இதே தினம் 21 மணிக்கு நாநத்தில் அமெரிக்காவுக்கும் யூக்கோஸ்லாவியாவுக்குமிடையில் நடைபெறவுள்ளது. G பிரிவு அணியின்போட்டிகள் யூன் 15 திங்கட்கிழமை 14மணி30இற்கு மார்ஷெயில் இங்கிலாந்கிற்கும் துனீஷியாவிற்குமிடையிலான மோதலுடன் ஆரம்பிக்கின்றது. 2வது போட்டி இதே தினம் 17மணி 30இற்கு லியோனில் ரூமேனியாவுக்கும் கொலம்பியாவுக்குமிடையில் நடைபெறவுள்ளது. 3வது போட்டியில் யூன் 22 திங்கட்கிழமை மொன்பலியேவில் கொலம்பியாவும் துனீஸியாவும் மேதுகின்றன. இதே தினம் 21 மணிக்கு துலுசில் 4வது போட்டியில் ரூமேனியாவும் இங்கிலாந்தும் மோதுகின்றன. 5வது போட்டி 26 யூன் வெள்ளிக்கழமை 21 மணிக்கு Stade de France இல் ரூமேனியாவுக்குமிடையில் நடைபெறவுள்ளது. 6வது போட்டியில் இதே தினம் இதே நேரத்தில் லான்ஸில் இங்கிலாந்தும் கொலம்பியாவும் மோதுகின்றன .

இறுதியாக H பிரிவு அணிகள் இப்பிரிவின் முதல் 14 யூன் 17.30 மணிக்கு துலூஸில் ஆர்ஜென்டீனாவுக்கும் யப்பானுக்குமிடையில் நடைபெறவுள்ளது 2வது போட்டி இதே தினம் 21மணிக்கு லான்சில் யமேகாவுக்கும் குறேசியாவுக்குமிடையில் இடம்பெறுகின்றது. 3வது போட்டி 20 யூன் சனிக்கழமை 17மணி30இற்கு நாநத்தில் யப்பானுக்கும் குறேசியாவுக்குமிடையில் நடைபெறவுள்ளது.. 4 வது போட்டி யூன் 21 ஞாயிற்றுக்கிழமை 14மணி30இற்கு பாரிஸ் பார்க் டி பிரின்ஸில் ஆர்ஜென்டீனாவுக்கும் யமேக்காவுக்கும் இடையில் நடைபெறுகின்றது. 5வது போட்டியில் 26 யூன் வெள்ளிக்கிழமை 16 மணிக்கு லியோனில் ஜப்பானும் யமேக்காவும் மோதுகின்றன. 6வது போட்டி இதே தினம் இதே நேரம் போர்டோவில் ஆர்ஜென்டீனாவிற்கும் குறேசியாவிற்குமிடையில் நடைபெறவுள்ளது.

1வது, 8வது சுற்றுப்போட்டி A பிரிவில் முதலில் வரும் அணிக்கும் B பிரிவில் 2ஆவதாக வரும் அணிக்குமிடையில் 27 யூன் 21.00 மணிக்கு பாரிஸில் நடைபெறும். 2வது 8வது சுற்றுப்போட்டி B பிரிவில் வரும் முதல் அணிக்கும் A பிரிவில் 2ஆவதாக வரும் அணிக்குமிடையில் 27 யூன் 16.30 மணிக்கு மார்ஸெய்யில் நடைபெறும். 3வது போட்டி C பிரிவில் முதலாவதாக வரும் அணிக்கும் D பிரிவில் 2ஆவதாக வரும்




நிகழ்ச்சிகள் மூலம் நேயர்களிடம் பிரபல்யம் பெற்று விட்டார்.

## திருமதி. நவரட்ணராணி சிவலிங்கம்

யாழ். மயிலிட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி. நவரட்ணராணி அவர்கள் தமிழ் ஒலியின் பிரபல்யமான நிகழ்ச்சியான் பொதுஅறிவுப்போட்டியினை நடாத்தி நேயர்களை திணறடித்து வருபவர். ருசிப்போம் ரசிப்போம். இளமை என்றும் இனிமை நிகழ்ச்சிகளை இனிமையாக நடத்துபவரும் இவர்தான்.

## திருமதி. ஜெயராணி ஜெயசூரியர்



பாரிஸ் மேடைநாடகங்களிலும், பாரிஸில் தயாரிக்கப்பட்ட வீடியோ திரைப்படங்களிலும் தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்திவரும் திருமதி. ஜெயராணி ஜெயசூரியர் தமிழ் ஒலி நாடகங்களிலும் நடித்து வருகிறார்.

## மலர்ந்த சஞ்சிகை

கலைமகள் கரங்களில்
கமலமணத்தடன் மலர இருக்கும்
தமிழ் ஒலி தமிழ் ஒளி சஞ்சிகையே

உன் ஒலிகேட்டு
இன்பத்துள்ளலுடன் எம் இதயம்
உன்வரவை, வழிமேல் விழிவைத்து காத்திருப்பதுபோல்
எம் விழிகள் இமைக்கமூடாமல் காத்திருக்கின்றன.
கரங்கள் சஞ்சிகையைத்தொட
பரபரக்கின்றன.
அந் நன்நாள் அருகில் வராதா?
ஏக்கத்துடன் எம் இதயம்
செவிக்கு இனிமை உன் தமிழ் ஒலி
விழிக்கு ஆனந்தம் உன் தமிழ் ஒளி - இனி
இதயம் முழுக்க சஞ்சரிக்க வந்துகொண்டிருக்கும்
சஞ்சிகை
ஓ எம் மனம் குளிர்கிறது
உன்னை இரு கை கூப்பி வரவேற்கிறோம்
தமிழ் இரசிகர்களின் இல்லம் தோறும் வரவேண்டும் - நம்
இதயம் முழுவதும் சஞ்சரிக்கவேண்டும்
இன்பம் நிறையத் தரவேண்டும்
ஈரேழு உலகம் ஆளவேண்டும்

நன்றி

**திரு. அ. தெய்வேந்திரன்,**
**திருமதி. பவா தெய்வேந்திரன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் தினமும் இரவு 8.30 மணிக்கு ஒளிபரப்பாகின்றது**

T.V. தொடர் நாடகத்தில் ஏராளமான ரசிகர்களைக் கவர்ந்தது ரகுவம்சம். அதற்குப்பின் இப்பொழுது அதிக ரசிகர்களைக் கவர்ந்திருக்கும் நாடகம் சக்தி.

தினம் தினம் ரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புடன் ஒளிபரப்பாகும் சக்தி நாடகத்தில் தமிழ் சினிமாத்துறையின் பிரபல நடிகர்கள் பானுப்பிரியா, ஜெய்கணேஷ், வடிவுக்கரசி, சி. ஆர். சரஸ்வதி உட்பட பலர் நடித்து சக்திக்கு மெருகூட்டுகிறார்கள்.

பணம் இல்லாத வீட்டில் தினம் தினம் சச்சரவுகள் சாதாரணம். ஆனால் பணம் படைத்தவரான ரங்கராஜன் வீட்டிலோ தினமும் பல பிரச்சினைகள். பிரச்சினைகளால் குடும்பம் படும் வேதனைகள். அது என்னதான் பிரச்சினை ? தொடர்ந்து சக்தியைப் பாருங்கள்!!




அணிக்குமிடையில் 28 யூன் 16.30 மணிக்கு லான்சில் நடைபெறும். 4வது 8 வது சுற்றுப்போட்டி D பிரிவில் முதலாது வரும் அணிக்கும் C பிரிவில் 2ஆவதாக வரும் அணிக்குமிடையில் Stade de France ல் 28 யூன் 21.00 மணிக்கு நடைபெறும். 5வது போட்டி E பிரிவில் முதலில் வரும் அணிக்கும் F பிரிவில் 2 ஆவதாக வரும் அணிக்குமிடையில் 29 யூன் 21.00 மணிக்கு துலுாசில் நடைபெறும். 6வது போட்டி F பிரிவில் முதலாவதாக வரும் அணிக்கும் E பிரிவில் 2 ஆவதாக வரும் அணிக்குமிடையில் தொன்பலியோவில் 29 யூன் 16.30 மணிக்கு நடைபெறும். 7வது போட்டி G பிரிவில் முதலாவதாக வரும் அணிக்கும H பிரிவில் 2 ஆவதாக வரும் அணிக்குமிடையில் 30 யூன் 16.30 மணிக்கு போர்டோவில் நடைபெறும். இறுதி 8வது சுற்றுப்போட்டி H பிரிவில் முதலாவதாக வரும் அணிக்கும் G பிரிவில் 2ஆவதாக வரும் அணிக்குமிடையில் 30 யூன் 21.00 மணிக்கு சென் எத்தியனில் நடைபெறும் .

கால் இறுதிப்போட்டிகளில் யூலை 3 ஆம் திகதி 21.00 மணிக்கு நாநத்தில் முதல் 8 ஆவது சுற்றின் வெற்றியாளரும் 4 ஆவது 8 ஆவது சுற்றின் வெற்றியாளரும் மோதுவார்கள். 2ஆவது காலிறுதிப் போட்டி இதே தினம் 16.30 க்கு Stade de France ல் 2ஆவது 8ஆவது சுற்றின் வெற்றியாளரும் 3ஆவது 8ஆவது சுற்றின் வெற்றியாளரும் மோதுகின்றனர். 3ஆவது காலிறுதிப்போட்டி 4 யூலை 16.30 க்கு மார்ஸெய்யில் 5ஆவது 8 ஆவது சுற்றுப்போட்டியின் வெற்றியாளர்களுக்கும் 8ஆவது சுற்றுப்போட்டியாளருக்குமிடையிலான போட்டி நடைபெறவுள்ளது. இறுதி காலிறுதிப்போட்டி இதே தினம் 21.00 மணிக்கு லியோனில் 6ஆவது 8ஆவது சுற்றுப்போட்டியின் வெற்றியாளருக்கும், 7ஆவது 8ஆவது சுற்றுப்போட்டியின் வெற்றியாளர்களுக்குமிடையில் நடைபெறவுள்ளது.

அரையிறுதி ஆட்டங்களில் முதலாவது காலிறுதிப்போட்டியில் வென்ற அணியும் மார்ஸெய்யல் 7 யூலை 21.00 மணிக்கு மோதுகின்றனர். அடுத்த அரையிறுதிப்போட்டி 2ஆவது காலிறுதிப்போட்டியில் வென்ற அணிக்கும், 4 ஆவது காலிறுதிப்போட்டியில் வென்ற அணிக்குமிடையில் 8 யூலை 21.00 மணிக்கு Stade de France ல் நடைபெறவுள்ளது.

மூன்றாவது இடத்திற்கான போட்டி 11 யூலை 21.00 மணிக்கு பாரிஸ் பார்க் டி பிரின்ஸில் நடைபெறும். இறுதிப்போட்டி 12 யூலை 21.00 மணிக்கு சென் டென்னிசிலுள்ள Stade deFrance ல் இடம்பெறும். இவ்வருடம் 12 யூலை நள்ளிரவுடன் இந்த உலகக் கிண்ண உதைபந்தாட்ட திருவிழா நிறைவுபெறுகிறது.

— ஆதித்தன்

**உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:**

T.R.T.
79, Rue Rateau, 93120 La Courneuve,France.

## அறுவை

நண்பர் 1 : மச்சான் நாளைக்குப் பரதநாட்டிய அரங்கேற்றத்துக்குப் போறியா?

நண்பர் 2 : (கொஞ்சம் அமைதியாகி, பின் ஒரு முறைப்பொன்று முறைத்து விட்டு) ஓ, அவனவன் இஞ்ச தண்ணியடிக்கவே நேரமில்லாமல் திரியிறான். இப்ப இதுக்குள்ள அரங்கேற்றத்துக்கு....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## புகலிட நாடுகளில் வாழும் தமிழர்களும் தமிழ் கலாச்சாரங்களும்

காலப்போக்குக்கும் நிலைக்கும் ஏற்ப தன்னை மாற்றிப்போற்றிக்கொள்ளாத எந்த உயிரினமும் வாழ்ந்ததில்லை. வாழ்க்கையைத்தொடர்ந்ததில்லை என்பதுதான் வரலாறு உணர்த்துகின்ற செய்தி. காலத்திற்கேற்ற கோலமும் மாற்றமும் வேண்டியவைதான். ஆனால் எந்தெந்த அம்சங்களில் மாற்றம் அனுமதிக்கப்படலாம் எந்தெந்த அம்சங்களில் மாற்றம் அனுமதிக்கப்படலாகாது என்பதிலே தான் மக்களினத்தின் வாழ்வும் தாழ்வும் தங்கியிருக்கின்றது. தமிழினத்தைப்பொறுத்தவரையிலும் அத்தகைய மாற்றங்கள் காலந்தோறும் ஏற்பட்டுவந்திருக்கின்றன. சங்ககாலத்தமிழரின் பழக்கவழக்கங்களுக்கும் இன்றைய தமிழர் கடைப்பிடிக்கின்ற பழக்கவழக்கங்களுக்குமிடையில் எத்தனையோ வேறுபாடுகள் ஏற்பட்டுவிட்டன. அவை தவிர்க்கமுடியாதவை. பழக்கவழக்கங்களில் மட்டுமல்ல, தமிழரின் இலக்கியங்கள், இலக்கணங்களைப்பொறுத்தவரையிலும் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. சங்ககாலத்தில் நிலவிய பாவகைகளான, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியன இன்று வழக்கொழிந்து போயின. அவற்றின் இடத்தில் விருத்தப்பா என்ற ஒன்று புகுந்துகொண்டது. தொல்காப்பியர் வகுத்த தொல்காப்பிய இலக்கண விதிகளில் மாற்றங்கள் பல ஏற்பட்டுவிட்டன. இந்த மாற்றங்கள் ஏற்பட்டதன் விளைவாகவேதான் நன்னூல், நேமிநாதம் என்ற புதிய இலக்கண நூல்கள் தோன்றலாயின. இத்தகைய மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை என்பதைக்கூறவந்த நன்நூலாசிரியர் பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலக்காலவகையினானே; என்ற நன்னூலில் சூத்திரம் செய்தார். அவர் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்றுகூறினாரேயொழியப் பழையன கழித்தலும், புதியன புகுத்தலும் என்று கூறவில்லை என்பதை மனம்கொள்ளல் வேண்டும்.

காலப்போக்குக்கு ஏற்ப மாற்றம் நிகழ்ந்துதான் ஆகும் என்பதை ஒப்புக்கொண்ட மகாகவி பாரதியார் சார்பினுக்கெல்லாம் தகத்தக மாறித் தன்மையும் தனது தருமம் மாறாமல் என்றுமோர் நிலையாய் இருக்கவேண்டும் என்று பாடினான். தோற்றமும் புறத்துத் தொழிலுமே காத்துப்பயனில்லை என்று வற்புறுத்தினான். உள்ளுறு தருமமும் உண்மையும் மாறினால் எந்த இனமும் சிதைந்துவிடும் என்று ஓங்கியுரைத்தான்.

இந்தப்பின்னணியிலேதான், புலம்பெயர்ந்து வந்து மேற்கில் வாழுகின்ற இன்றை தமிழரின் போக்கையும், மனநிலையையும் எண்ணிப்பார்க்கவேண்டும். சிங்களவலையின் சின்னத்தனத்தையும் பொறுக்கமுடியாமல் சீதனக்காணிகளையும் சிங்காரவளவுகளையும் விட்டுவிட்டு மேற்குலகம் நோக்கி ஓடிவந்தபோது ஈழத்தமிழனுக்கு இருந்த மனநிலைவேறு மேற்குலகில் வந்து சேர்ந்து வேரூன்றத் தொடங்கிய பின்னர் அவனுக்கு ஏற்பட்டிருக்கின்ற மனப்போக்க வேறு. தமிழில் கற்க முடியவில்லை. தமிழில் தொடர்பு வைத்திருக்க முடியவில்லை. நிர்வாகத்தில் தமிழ் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. நீதிமன்றங்களிலும் நீதி




## இராமாயணம் பார்ப்போம்

நாங்கள் அனைவரும் படித்து தெரிந்து கொள்ளவேண்டிய காவியம் இராமாயணம். பள்ளிக்கூட வாசனையே அறிந்திராத எங்கள் முதாதையர்களில் பலர் இராமாயணத்தின் கதையை கம்பரின் கவிதையடிகள் பிசகாமல் கதைகதையாக சொல்வதைக்கேட்டு வியந்து விடுகிறோம். ஆனால் எங்களில் பலருக்கு இராமாயணத்தைப்படிப்பதற்கான நேரமோ அல்லது பொறுமையோ கிடைப்பதில்லை. அந்தக் குறையைப்போக்க சண் ரீவியின் துணையோடு தமிழ் ஒளியில் தொடர்ந்து ஒளிப்பரப்பாகின்றது.

இராமாயணத்தை அறிந்துகொள்வதற்கு இது ஒரு வரப்பிரசாதம். இராமாயணம் ஒரு கற்பனைக்கதை என்று சிலர் சொல்கிறார்கள். இந்தக்கேள்விக்கு கவியரசு கண்ணதாசன் என்ன பதில் சொல்கிறார் தெரியுமா? "இராமாயணத்தை கற்பனை என்றே வைத்துக்கொள்வோம். அந்தக் கற்பனைக்குள் எவ்வளவு தத்துவங்களை வைத்து நேர்மையாக நெறிப்படுத்தியிருக்கிறார்கள். இராமாயணத்தில் கூறப்படாத விடயம் தானென்ன? வீரத்தின் எல்லைகள், தர்மத்தின் உச்சிகள் அதன் ஆழங்கள், அறிவாற்றலின் சிகரங்கள், சத்தியத்தின் வலிமை, ததுவத்தின் கடுமை, பொய்மையின் சாகசம், அரசியல் ஆட்சிமுறை, ராஜதந்திர போர்முறைகள், பெண்மையின் இயல்புகள் நட்பின்மேன்மை, சகோதரபாசம், தாய்ப்பாசம், குருபக்தி, பொறாமை, விதியின் விளையாட்டு பக்தியின் பலன் இப்படி இன்னும் பல...பல.... ஒரு பட்டியலில் அடக்கமுடியாத பல வியங்கள் பற்றிய தத்துவங்களும், படிப்பினைகளும் பல்வேறுபட்ட மனித குணாதிசயங்களாக படைத்துவிட ஒருவருக்கு கற்பனை உண்டென்றால் அந்த கற்பனாவாதியின் சக்திதானென்ன?"

அப்படியானதொரு அரியகாவியம் இப்பொழுது தமிழ் ஒளியில் வாரந்தோறும் தொடராக வருகிறது உங்களுக்காக...

**ஒவ்வொரு**
**புதன்கிழமைகளிலும்**
**ஒளிபரப்பாகின்றது**

www.tamilarangam.net






**பிரதி வெள்ளி தோறும்**
**இரவு 8.15ற்கு**
**ஒளிபரப்பாகின்றது.**

**ஏ.வி. ரமணன் தொகுத்து வழங்கும்**
**சப்தஸ்வரங்கள்**
**பிரதி ஞாயிறுதோறும்...**
**ஒளிபரப்பாகின்றது.**



நிர்வாகத்துறையிலும் தமிழ் அங்கீகரிக்கப்படவில்லை. தமிழ் தெரிந்தும் ஆங்கிலம் அறிந்தும் சிங்களம் கற்காவிடில் அரசாங்கத்தில் தொழில் இல்லை. இந்துசமயம் வளர வழியில்லை. இந்துசமயத்துக்கு அரசியலமைப்பு என்ற யாப்பில் இடமில்லை. தமிழினம் அழிகிறது. தமிழினத்தை அழிக்கிறார்கள் என்று முறையிட்டுக்கதறியபடிதான் நம்மிற்பலர் தமிழீழத்தை விட்டு ஓடோடிவந்தோம்.

அப்படி அல்லோலகல்லோலப்பட்டு ஓடிவந்த நாங்கள் இங்கே வேரூன்றத் தொடங்கியவுடன், பாரதி அன்று சொன்னதுபோல் எமது மண்ணையும் மறந்து மொழியையும் மறந்து பண்பையும் துறந்து மதத்தையும் வெறுத்துக்கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று கண்டபாட்டுக்கு கொண்டைமுடிக்க ஆரம்பித்திருக்கின்றோம். இந்த நியைப்பற்றிப் பாடும்போது பாரதி சொன்ன மேற்றிசை

வாழும் வெண்ணிற மக்களின்
செய்கையும் நடையும் தீனியும் உடையும்
கொள்கையும் மதமும் குறிகளும் நம்முடை
யவற்றிலும் சிறந்தன ஆதலின் அவற்றை
முழுதுமே தழுவி மூழ்கிடின் அல்லால்
தமிழ்ச்சாதி தரணிமீதிராத
பொய்த்தழிவெய்தல் முடிவெனப்;;

புகலுகின்றவர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் அறியாமை நிரம்பியவர்கள் என்று பாரதி அன்றே பாடினான்.

மேற்றிசைக்கு வந்து தோற்றமும் புறத்துத்தொழிலுமே காத்துவாழுகின்ற நம்மவர்கள் பலர் தமிழ்படித்துப்பயன் என்ன? தமிழ்க்கலாச்சாரத்தைப் பின்பற்றிப்பேணிக்காப்பதால் என்ன பயன் என்ற கேட்கிறார்கள்?
கைப்புண்ணைப்பார்ப்பதற்கு கண்ணாடிகேட்கிறார்கள்.
நித்திரை செய்பவனைத் தட்டி எழுப்பிவிடலாம்.
நித்திரைபோற் பாசாங்கு செய்பவனை என்ன செய்ய முடியும்? நாம் தமிழராகவாழப்போகின்றோமா அல்லவா என்பதுதான் கேள்வி? மதிழராக வாழவேண்டிய அவசியம் இல்லை. தமிழன் என்ற அடயாளம் வேண்டியதில்லை. தமிழன் என்ற தனித்தவம் தேவையில்லை என்று கூறுவோர்களிடம் பேசிப்பயனில்லை.
ஈழத்தமிழர் இலங்கையின் ஆதிக்குடிகள். மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அந்த நாட்டில் வாழ்ந்தவர்கள். இரண்டாயிரம் ஆண்டுகள் அருகருகாக வாழ்ந்தவர்களின் கொடுஞ்செயலால் அங்கே வாழமுடியாமல் ஓடிவந்த நாங்கள், மேற்கு நாட்டில் எல்லாவகையாலும் வேறுபட்ட வெள்ளைத்தோல் மக்களுடன் ஒற்றுமையாக வாழ்வோம், அவர்கள் எம்மை அடித்து நொருக்கமாட்டார்கள், நாங்கள் திரும்பவும் வேறொருநாட்டுக்கு ஓட்டமெடுக்கவேண்டிவராது என்பதற்கு என்ன உத்தரவாதம்?
அப்படி வெள்ளதைத் தோல்கள் விரட்டி அடிக்கின்றபோது எந்த நாட்டுக்கு ஓடுவது?

அப்படி வெள்ளைத் தோல்கள் விரட்டி அடிக்கிள்ற நேரத்தில் தமிழீழம் அமைந்துவிட்டால் தமிழீழத்துக்கு ஓடிப்போகலாம். அவ்வாறு போகின்றபோது, கோழைகளாகிய எம்மை அவர்கள் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால் தமிழீழத்தில் நமது பிள்ளைகள் என்ன மொழியில் பேசுவார்கள்:
தமிழ்மொழியும், தமிழ்க்கலாச்சாரமும் புரியாத நம் பிள்ளைகள் தமிழீழத்திலும் அகதிகளாக வாழப்போகிறார்களா?
இப்படியான சில கேள்விகளை இந்தநேரத்தில் கிளப்பி விடைகாணமுயன்றால், தமிழ்ச்சிறார்கள் தமிழ்மொழியையும், தமிழ்க்கலாச்சாரத்தையும் பேணவேண்டுமா என்பதற்கான விடைகிடைக்கும். தமிழ்மொழியையும்,

www.tamilarangam.net

*தமிழ்க்கலாச்சாரத்தையும் பேணவேண்டும் என்பதே விடையாகவரும். அப்போது தமிழ்மொழியை நவீனயுக்திகள் மூலம் பயிற்றுவது எப்படி, கலாச்சாரத்தைப் பேணுவது எப்படி என்பவற்றுக்கான முயற்சிகளும் ஓங்கும். மேற்குலகில் வாழ்கின்ற தமிழர்களிடம் இருக்கின்ற குழப்பமான மயக்கத்தைப் போக்குவதற்குச் செய்தியூடகங்கள் அயராது முயலவேண்டும். TRT Radio போன்ற சாதனங்களின் முயற்சி பாராட்டுக்குரியது.*

**செ. சிறீஸ்கந்தராஜா**

தமிழ் ஒலியில் சமூகமேடை நிகழ்ச்சியில் எங்கள் சந்ததியின் எதிர்காலம் எனும் தலைப்பிலான நிகழ்ச்சியில் திரு. சிறீஸ்கந்தராஜா கலந்துகொண்டார். நிகழ்ச்சியை ஒட்டிய கட்டுரை இது.

## சந்தாதாரராகுங்கள்!

தமிழ் ஒலி, ஒளி சஞ்சிகையின் வாசகர்களுக்கு , மாதமொருமுறை வெளிவரவிருக்கும் தமிழ் ஒலி, ஒளியில் நிகழ்ச்சிகள் பற்றிய நேர விபர அட்டவணையுடன் நிகழ்ச்சி பற்றிய விபரக்குறிப்புகள், விமர்சனங்கள், கதைச்சுருக்கங்களுடன் கவிதை, சிறுகதை ஆகியவற்றுடன் மலரும்.

ஒரு பிரதியின் விலை 10 பிராங்

வருடச்சந்தா 120 பிராங் (தபாற்செலவுடன்)

சந்தாதாரராக இணைய விரும்புபவர்கள் கீழே உள்ள விண்ணப்பப்படிவத்தை ர்த்தி செய்து சந்தாவிற்கான பணத்தை T.R.T. யின் வங்கிக்கணக்குக்கு அனுப்பி அதற்கான பற்றுச்சீட்டையும் இணைத்து ,

T.R.T.
79, RUE RATEAU
93120, LA COURNEUVE.

என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

## அதிர்ந்தேன்!

தமிழ் ஒலியில் ஒலிக்கும் சமூகமேடை பயனுள்ள நிகழ்ச்சியாக வளர்ந்து வருகிறது. அறியப்படாத பல விஷயங்களும், அட! இவ்வளவு விஷயஞானமுள்ளவர்கள் உலகெங்கும் பரவிக்கிடக்கிறார்களே என்ற பேருவகையும் கொள்ளவைக்கிறது.

அண்மையில் நடந்த சமூகமேடையொன்றில், திருமணச்சடங்குகளில் சமஸ்கிருதத்தில் மந்திரம் ஓதுவது பற்றி நண்பர் ஒருவரின் கருத்துக்கேட்டு அதிர்ந்தேன்! சடங்கினை நடத்தும் ஐயர் சடங்கின் முதன்மையாளராகவும், ஆபாசவார்த்தைகளை அள்ளிக்கொட்டுபவராகவும் இருக்கிறார் என்றும், உதாரணத்திற்கு மணமகளை வேதாகமப்படி சகலவிதத்திலும் தேவர்களின் மனைவியாக ஏற்றபின்னரே தாலிகட்ட அனுமதிக்கிறார் என்ற தகவலையும் அறிய முடிந்தபோது அதிர்ந்தேன்! இதை யெல்லாம் எப்படி தமிழில் சொல்வது? மந்திரம் சொல்வதற்கு சமஸ்கிருதம் அவசியம் தான்!

- மயூரன்



**தினமும் மாலை 4.45 மணிக்கு**

**முதல் நிகழ்ச்சியாக ஒளிபரப்பாகின்றது.**

## இந்த நாள் இனிய நாள்

நல்லதை சொல்வோம். நல்லதை கேட்போம். நல்லதையே செய்வோம். இந்தக்கருத்திற்கு உயிரூட்டுவது இந்தநாள் இனியநாள் என்னும் இந் நிகழ்ச்சி.

நாம் நல்லதையே செய்ய சின்னச்சின்னக் கதைகள் சொல்லி நல்ல கருத்துக்களை இலகுவாக மக்கள் மனதில் பதிய வைத்து விடுகிறார்கள். நிகழ்ச்சியை வழங்கும் திரு. பெரியார்தாஸன், திரு. பா. நமசிவாயம், திரு. தென்காசி சுவாமிநாதன் ஆகியோர் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்லர்.
இந்நிகழ்ச்சி காதிற்கினிமையாகவும், மனதிற்கு குளிர்ச்சியாக்வும் இருப்பதால் இந்தநாள் நல்லநாளாக இருப்பதற்கு ஒரு வழிகாட்டியாகவும் அமைகின்றது.

**பிரதி வியாழன் தோறும்...**
**சொல்லுங்கள் வெல்லுங்கள்**
**ஒளிபரப்பாகின்றது.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# அபிராமி

**ஒவ்வோரு செவ்வாய் களிலும் ஒளிபரப்பாகின்றது.**

## சுய விமர்சனம்

பெயர் : தமிழ் ஒலி - ஒளி
**சைற்அடிக்கும் இடங்கள் :**
ஐரோப்பா, கனடா, தற்போது மத்திய கிழக்கிலும். மொறிசியஸிலும்
வயது : நடிகைகளின் வயது
பெற்றோர் : ஜரோப்பாவில் வாழும் பிரமுகர்கள் சிலர்
பிடித்தது : உங்கள் இல்லங்களில் வலம் வருவது
பிடிக்காதது : விமர்சனங்கள் எழுதாதிருப்பது
நண்பர்கள் : விமர்சனங்களை பகிர்ந்து கொள்பவர்கள்
விரோதிகள் : தெரியாமலே அவதூறு செய்பவர்கள்
சந்தோஷம் அகங்காரமான அஸ்ராவிலும் வலம்வருவது
ஒரு குறை : என்னுடன் பணிபுரிபவர்கள் வீட்டை மறந்து விடுவது
ஒரே சாதனை : என்னை விரிவபடுத்தி BBC தமிழ் ஓசை கனடிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் சன்ரிவி ஆகியவற்றடன் இணைந்திருப்பது.
அநியாய சாதனை : நான் குடி புகுந்த இல்லங்களில் எல்லாம் நிரந்தரமாகவே தங்கி விடுவது.

- வண்ணை

**ஒவ்வோரு செவ்வாய் களிலும் ஒளிபரப்பாகின்றது.**




அன்பின்
TRT தமிழ் ஒளி, ஒலி இயக்குனர்நாயகம் மற்றும் அனைவர்க்கும் முதற்கண் எங்கள் வாழ்த்துக்கள் என்றும். தமிழ் ஒளி 2வது தடவையாக தமிழ்ப்புத்தாண்டை கொண்டாடப்போவதை நினைக்கச் சந்தோசமாக உள்ளது.

தமிழ் ஒளி நிகழ்ச்சிகள் யாவும் மிகவும் நன்றாகவே உள்ளன. அதிலும் புதிதாக இடம்பெற்றுள்ள காலைப்பூந்தென்றல் Realy Super! அதைப்பாராட்டி எழுதுவதற்கு எனக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

தர்ஷனிடம் ஒரு கேள்வி. ஏன் நீங்கள் News வாசிக்கும்போதுமட்டும் Clicks வருகின்றன?
வாழ்க. வளர்க TRT தமிழ் ஒளி
என்றும் அன்புடன்
**திருமதி. ராஜி சிவரூபன்**
டென்மார்க்.

...தமிழ் ஒளியே!
ஜரோப்பிய வான் அலைகளில் உலா வந்துகொண்டிருக்கும் எங்கள் சின்னத்திரை வண்ணநிலவே, உலகமெங்கும் உன் தமிழ் ஒளி வீசிட எல்லோருக்கும் பொதுவான, எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டுகிறேன்.
வாழ்க தமிழ் ஒளி! வளர்க உங்கள் தமிழ்த்தொண்டு.

இப்படிக்கு
**ஐ. அப்துர் றஹ்மான், பிரான்ஸ்**

# பார்த்தவர்கள், கேட்டவர்கள் சொல்கிறார்கள்...

"(தமிழ் ஒளி" தொலைக்காட்சியை ஒரு டெக்கோடரில் பலவீடுகளுக்கு சிலர் இணைப்புக்கொடுத்திருப்பது கண்டறியப்பட்டது குறித்து வானொலியில் நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது. அந்நிகழ்ச்சிக்குப்பின்னர் ஒரு நேயர் எழுதிய கடிதம் இது).

அன்பார்ந்த TRT தமிழ் ஒளியை துஷ்பிரயோகம் செய்யும் நேயர்களே!
பாலைவனத்தில் ஒரு பசுமையே தமிழ் ஒளி. எல்லாம் இருந்தும் நிம்மதி இல்லையே என அங்கலாய்க்கும் தமிழர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம். சுயநலம் தேவை. மறுக்கவில்லை. ஆனால் ஏகோபித்த சுயநலமாக இது அமையும்போது இங்கு தேவைப்படுவது பொதுநலமே.
"பிழை விடாத மனிதனுமில்லை' பிழை விடாதுவிட்டால் அவன் மனிதனுமில்லை. பிழை என்று தெரிந்தபின்பு திருந்தாவிட்டாலும் அவன் மனிதனுமில்லை" இது ஒரு பெரியார் எனக்குச்சொன்னது. உங்களுக்கும் அறியத்தருகிறேன். தயவு செய்து உங்கள் போக்கில் மாறுதலுக்கு இடம் அளியுங்கள்! இந்த நவீன உலகில் பலர் கண்டு பயன்பெறும், பயப்படும் மூன்று சக்திகளை திறம்பட நிர்வகிப்பவர் திரு. குகநாதன் அவர்கள்.

ஒன்று பத்திரிகை ஈழநாடு.
இரண்டு வானொலி. அவரின் ஊக்கத்தில் உருவாகியது வானொலி. மிகவும் சக்திவாய்ந்த சாதனம் ரி.வி. இதைக்கண்டு பயப்படாத அரசியல்வாதியுமில்லை. கிரிமினலுமில்லை.

இளவரசி டயானாவின் வாழ்க்கை வரலாறு மிகவும் சிறந்த உதாரணம். பதவியை விட்டு ஓடியவர்கள், மனோ நிலை பாதிக்கப்பட்டவர்கள், தற்கொலை செய்த கொண்டவர்கள் இப்படிப்பலர். இப்படியான பாதிப்புக்கள் உங்களுக்கும் வேண்டுமா? வெந்த புண்ணில் வேல்பாச்சுவது எனது நோக்கமல்ல. புண்ணுக்கு மருந்து தேடச்சொல்கிறேன்.

**க. இலங்காதிலகம்.**
ஓகுஸ், டென்மார்க்.

அன்புடன் TRT இயக்குனர் நாயகம் அவர்களுக்கு,

இப்பொழுது அறிமுகப்படுத்தியுள்ள காலைப்பூந்தென்றல் மிக நன்றாக உள்ளது. அதில் சில குறைகள் இருந்தாலும் எதிர்காலத்தில் அக்குறைகள் நிவர்த்தியாகும் என நம்பலாம்.

அண்மையில் ஒளிபரப்பாகிய "எச்சில் போர்வை" குறும்படம் அன்று ஒளிபரப்பான நிகழ்ச்சிகள் யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் இருந்தது. இது போன்ற எம்மவர்களின் ஆக்ககங்களை தினமும் ஒளிபரப்பினால் மிகவும் உபயோகமாக இருக்கும்.

**சி. ஜெயராஜா**
மிடில்பாட், டென்மார்க்.

T.R.T. இயக்குனர் அவர்களுக்கு, பிறந்த நாளிலிருந்து தமிழ் ஒலி, தமிழ் ஒளியின் ஒரு ரசிகன். A.S. ராஜாவின் காலைப்பூந்தென்றல் நிகழ்ச்சி மூலம் TRT தமிழ் ஒலி நேயர்கள் பலர் தமிழ் ஒளிக்கு மாறியதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே இதேபோல் தர்ஷன், பிலிப்தேவா, நவாஜோதி, ஞானசீலி, நவரட்ணராணி போன்றோர் பொதுஅறிவுப்போட்டி, சிறுவர் முற்றம், ரசித்த காட்சிகள், போன்றவற்றை அரைமணித்தியாலமாவது ஒளிபரப்பினால் தமிழ் ஒளி நிச்சயம் வளரும்.

**எம். ரி. லோகராஜா, B.R.D.**


இனிய TRT தமிழ் ஒளிக்கு,
வணக்கம்.
தமிழோசை புதிய காட்சி மிக மிக அழகு. உலகில் பிபிசி என்னும் ஸ்தாபனம் எடுத்துத்தரும் தமிழோசையை TRT 7 நாட்களும் தருகிறது எனும் பொருள்பட 7 முறைக்கு ஒரு விநாடி நின்று சுழல்கிறது.

ஒரு நாள் ரிவி.யில் பார்த்த நிகழ்ச்சி போனதால் வானொலியைத்திருப்பினேன். சகோதரர் ராஜா, சகோதரி ஆஷாவைப் பேட்டி கண்டார். மிக சுவாரஸ்யமாக இருந்தது அந்தப்பேட்டி.

"உங்கள் குரலுக்கு" தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள 2 தடவைகள் முயற்சித்தும் கிடைக்கவில்லை.

வாழ்க! வளர்க உங்கள் சேவை!!

**திருமதி. வேதா இலங்காதிலகம்**
ஓகுஸ், டென்மார்க்.


**பிரதி சனிக்கிழமைகளில்...**

**ஆச்சி இன்டநேசனல்**

வெள்ளித்திரையில் 1000 படங்களுக்கு மேலாக நடித்து விட்ட எங்கள் ஆச்சி மனோராமா இப்பொழுது தமிழ்ஒளியில் வலம்வரும் ஆச்சி இன்டநேசனலிலும் வலம் வருகிறார். இந்த தொடர் நாடகத்தில் இன்னும் ஒரு விசேசம் உண்டு. என்னஅது? இசையமைப்பாளர் சந்திரபோஸ், பாடலாசிரியர் வைரமுத்து, ஆர்ட்டைரக்டர் தோட்டா தரணி, இயக்குனர் வெங்கட் ஆகிய சினிமா பிரபலங்களும் நடிக்கிறார்கள்.
இது ஒரு ஏவிளம் புரடெக்ஷன் தயாரிப்பு.

**ஒவ்வோரு வியாழன்களிலும்...**



**விடியல்**

www.tamilarangam.net



பிரதி ஞாயிறு தோறுறம்
ஒளிபரப்பாகின்றது.

**Mr. Brain**

**ரகுவம்சம்**

பார்க்கத்தவறிய ஏராளமான
நேயர்களின்
வண்டுகோள்களுக்கிணங்க
தினமும் காலையில்
ளிபரப்பாகின்றதுாகின்றது.




## நான் சொல்லத்துடிப்பது

### இருபத்தி நான்கு மணிநேரத்தில் எம்மைக்கவர்ந்த இரு மணி நேரம்

கனடாவில் பல வானொலிகள் நிகழ்ச்சிகளை நடாத்துகின்றன. ஆயினும் பாரிஸிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் ஒலியின் இரண்டு மணித்தியால நிகழ்ச்சிகள் இங்கு ஒலிபரப்பாகும் பல மணிநேர நிகழ்ச்சிகளையும் ஓரம் கட்டி விடுகின்றன. காரணம் ஒரு வானொலிக்கே உரித்தான பண்புடன் நிகழ்ச்சிகளை நகர்த்திச்செல்வது திறமைவாய்ந்த கலைஞர்கள் அறிப்பாளர்கள் நிகழ்ச்சி தயரிப்பது, குறிப்பாக செய்திகள், சிறுகதை, நாடகம், கவிதை போன்றவை நேயர்களை கேட்கத்தூண்டும் விதத்தில் நிகழ்ச்சிகளை தொகுத்துச்செல்வது வரவேற்கத்தக்கது.

இங்கு ஒலிபரப்பாகும் வானொலியை திறந்தால் "வணக்கம், வணக்கம், வணக்கம்" என்ற சொற்பிரயோகமே அதிக நேரத்தை நகர்த்திச்செல்கிறது. அதற்குக்காரணம் இலவச தொலைபேசி சேவை இருப்பதாலோ என்னவோ தொலைபேசியில் இருபக்கங்களில் இருந்தும் நிகழ்ச்சிகளில் பங்குகொள்பவர்கள் குறிப்பிட்ட சிலரே.

ஆனால், பாரிஸ் தமிழ் ஒலி, ஒரு வானொலிக்கு உரித்தான பண்புடனும், கட்டுப்பாட்டுடனும் ஒலிபரப்பாகுவதே இப்பலமணிநேரங்களில் இவ்விருமணிநேரங்களும் தரமான வானொலிச்சேவையை கனடாவில் பதிய வைக்கிறது. அத்தோடு பிபிசி யின் தமிழோசை அரைமணிநேரத்தையம் கனடிய வானொலியின் உறுதிமொழியை தமிழ் ஒலி நிவர்த்தி செய்துள்ளது.

புலம் பெயர்ந்த நாட்டில் தாயகமக்களை நினைவு கொண்டு அங்கும் இங்கும் இடம்பெறும் சமூகக்குறைபாடுகளைச்சுட்டிக்காட்டி மக்களை நல்வழியில் அழைத்துச்செல்வது பொதுசன தொடர்புச்சாதனங்களின் கடமையாகும். இதை தமிழ் ஒலி மிகவும் கவனமாகவும்; நிதானமாகவும் பல நிகழ்ச்சிகளில் எடுத்துச்செல்வது வரவேற்கத்தக்கது. தொடர்ந்தும் தங்களின் சிறந்தபணி தொடர வேண்டிக்கொள்கிறேன்.

**சிவராணி**
கனடா

(கனடாவில் ஒலிக்கும் கனேடிய் தமிழ் ஒலிபரப்புக்டுட்டுத்தாபன வானொலிக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. உலகின் முதல் 24மணிநேர தமிழ் வானொலி என்ற சிறப்புதான் அது. அந்த 24மணி நேர வானொலியில் தினமும் 2 மணிநேரம் தமிழ் ஒலியின் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.)

மே.தகு ரீ. ஆர். ரீயின் நிர்வாகி அவர்களுக்கு,
ஒரு சூடான கேள்வி.
இன்று ஓர் அந்நிய மண்ணில் இப்படி ஓர் தமிழ் வானொலி அதுவும் உலகம் கேட்கம் வானொலி நடாத்துவது என்பது கஷ்டமான விடயம். தமிழீழத்திலே அன்று முழு

www.tamilarangam.net

இலங்கையில் கேட்கக்கூடிய வானொலி ஒன்று இருந்ததாக நான் கேள்விப்படவில்லை. அப்படி இருக்கும்போது இங்குநடாத்தும் இந்த வானொலி சிறப்பாக அமைவதற்கு நேயர்களின் பங்களிப்பு வேண்டலாம் தானே! இது எனது கருத்து. வருடத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையாக, அதனை எவ்வளவு என்று நிர்ணயித்து தெரிவித்தால் விரும்பும் நேயர்கள் நிச்சயம் தமது பங்களிப்பினைத் தருவார்கள்.

இரா. கருணாகரன்
பாரும், டென்மார்க்.



# முதியோர் நிகழ்ச்சியை தொடர வேண்டும்

**அன்புடன் றேடியோ ஆசியாவிற்கு,**

எனது அன்பான வாழ்த்துக்களையும் இதயம் நிறைந்த நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பெண்ணின் குரல் நிகழ்ச்சியானது பெண்களுக்கு புதிய உற்சாகத்தைக்கொடுத்து, புலம்பெயர்ந்த நாட்டில்வாழும் பெண்களின் பிரச்சினைகளை எடுத்துக்காட்டி, அவர்களைப்புதுமைபெண்களாக உருவாக்கத்துடித்து நிற்கிறது. அன்புச்சகோதரிக்கு எனது இனிய நல்வாழ்த்துக்கள். எல்லா இளஞ்சிறார்களின் இதயவானில் ஒளிவிட்டுப்பிரகாசிக்கும் நட்சத்திரமான அன்பிற்குரிய சகோதரி திருமதி நவாஜோதி அவர்களுக்கும், விரக்தி என்னும் விஷப்பாம்பின் பிடியிலிருந்து விடுவித்து எம்மைச்சிரிக்கவைக்கும் அப்புக்குட்டி ராஜகோபால், சின்னக்குட்டி தயாநிதி ஆகியோருக்கும், அவர்களுடன் ஆக்கங்களுக்கு உயிர்கொடுத்து எம்மையெல்லாம் மகிழ்விக்கும் அன்புக்லைஞர்களுக்கும் எமது நிறைந்த பாராட்டுக்கள்.

தமிழ் ஒலியில் முதியோர் நிகழ்ச்சி இடம்பெற்று இடைநிறுத்தப்பட்டதையும் அறிவேன். முதியோர் நிகழ்ச்சியை மீண்டும் தொடரவேண்டும். அதை முன்பு நடத்திய சகோதரியே மீண்டும் தொடர்வது தான் பொருத்தமாக இருக்கும். முதியோரை நாம் மதிப்பும் மரியாதையும் கொடுத்துத்துதிக்கவேண்டும் அவர்களை அணுகும்போது ஒரு குழந்தையை அணுகும் மனோநிலையில் அணுகவேண்டும். அவர்களின் மனம் வேதனையடையும்வண்ணம் நாம்கேள்விகளைக் கேட்டுப்புண்படுத்தக்கூடாது. அவர்களின் அனுபவத்திலிருந்து நல்ல கருத்துக்களை நாம் உள்வாங்கிக்கொள்ளவேண்டும்.

அடுத்து குறுக்கெழுத்துப்போட்டி பற்றியது. முன்பெல்லாம் கு.எ.போட்டி நேயர்களின் அறிவைப்பரிசோதித்து அன்பான தாயக உணர்வையும் அடையாளம் இட்டுச்சென்றது. ஆனால் இப்பொழுது நேயர்களுக்குச்சவால்விட்டு அவர்களின் நேரத்தையம் பலாத்காரமாகப்பறித்துக்கொண்டு தாங்கள் கூறுவதே சரியான விடையென எண்ணி அதைநியாயப்படுத்த முயல்வது பலநேயர்களின் திட்டையும் விரும்பிவாங்கிக்கொள்வது போல்தோன்றுகிறது. குறக்கெழுத்துப்போட்டி முன்புபோல் நடைபெற வேண்டுகிறேன்.

அன்புடன்
திருமதி அம்பிகா இராஜலிங்கம், சுவிஸ்.




## பிரதி வியாழன் தோறும் ஒளிபரப்பாகின்றது.

தமிழகத்தில் வார இதழ் ஒன்றில் தொடராக வந்த கதை இப்பொழுது தமிழ்ஒளியில் ஒவ்வொரு வியாழனும் தொடர்நாடகமாக வலம் வருகின்றது. அந்த நாடகம் குப்பத்து சாஸ்திரிகள். சந்தர்ப்ப சூழ்நிலைகாரணமாக ஒரு குப்பத்திற்கு குடிவருகிறார் நீலகண்ட சாஸ்திரியார் அவரை குப்பத்துவாசிகள் எதிர்க்கிறார்கள்.
எதிர்ப்பைமீறி அவரால் அங்கு இருக்கமுடிந்ததா? அந்த விசித்திர அனுபவங்களை காண தமிழ் ஒளியில் வாரம் தோறும் வியாழன் 7மணிக்கு மேல் சின்னதிரையோடு உங்கள் விழியை உறவாட விடுங்கள்.
பல சிறுகதைகள், குறு நாவல்கள், நாவல்களை எழுதியிருக்கும் வி.வி.ஆர் முதல்முதலாக சின்னத்திரைக்கும் தன் காலடியை பதித்ததோடு 400 படங்களுக்கு மேல் நடித்த தமிழக ஜேம்ஸ் போண்ட் என்று வர்ணிக்கப்பட்ட நடிகர் ஜெய்சங்கர் குப்பத்து சாஸ்திரிகளான வித்தியாசமான பாத்திரத்தில் நடிக்கவைத்திருப்பதும் ஒரு புதுமையே . புதுமைகளை உடனுக்குடன் தருவதே தமிழ்ஒளியின் கடமை.
வியாழன்...வியாழன் பாருங்கள் விமர்சனங்களை மறவாது எழுதுங்கள்.

## பிரதி வியாழன் தோறும் ஒளிபரப்பாகின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



பிரதி செவ்வாய் தோறும்
ஒளிபரப்பாகின்றது.

லண்டன் பிபிசி
தமிழோசை
தினமும் மாலை 5.45 முதல்
6.15 வரை
ஒளிபரப்பாகின்றது

பிரதி வியாழன் தோறும்
ஒளிபரப்பாகின்றது.




# இன்ரர்நெட்டில் தமிழ்ஒலி

நவீன விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்களில் இன்று உலகின் கவனத்தையெல்லாம் தன்பக்கம் ஈர்த்திருப்பது இன்ரர்நெட் என்னும் கணனி ஊடான உலக வலைத் தொடர்பு.

அந்த வலைத்தொடர்பு இன்று உலகின் மூலை முடுக்குகளையெல்லாம் இணைத்திருக்கிறது.

நகரத்துக்குள் மாத்திரம் இருந்த உலகத் தொடர்பு மையம் இன்று பட்டிதொட்டியெங்கும் போய்ச்சேர்ந்திருக்கிறது.

இந்த நவீன வளர்ச்சியை தமிழ்ஒலியும் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

http://www.trt.net என்ற முகவரியில் தமிழ்ஒலியை உலகம் முழுவதிலுமிருந்து கேட்கலாம்.

## நேயர்களுக்கு,

ஒலி— ஒளி சஞ்சிகை ஆரம்பிக்கப்பட்டதை அறிந்து நீங்கள் அனுப்பிவைத்த ஏராளமான பாராட்டுக்களும், வாழ்த்துக்கடிதங்களும் கைக்கெட்டின. நீங்கள் அனுப்பிவைத்தவை எல்லாவற்றையும் பிரசுரிக்கமுடியவில்லை. இடவசதி தேவைகருதி சுருக்கவேண்டியும் ஏற்பட்டுள்ளது.

இன்னும்; வாழ்த்துக்கள் அனுப்பினாற்தான் ஒலி— ஒளி பிரசுரிக்கும் என்ற தவறான கணிப்பீடு இருந்தால் தயவுசெய்து தவிர்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ஆரோக்கியமான விமர்சனங்கள் எழுதுங்கள்! —நாம் நோகோம்! குறைகளைச் சுட்டுங்கள்!! நிகழ்ச்சிகளில் தொடர்ந்த விவாதங்களை சஞ்சிகையில் தொடருங்கள்!! தமிழ் ஒலி — ஒளியில் இரசித்த நிகழச்சிகளை சஞ்சிகையினுடாக ஏனைய நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்!
நல்லதொரு சஞ்சிகையாக வளர்த்தெடுப்படுப்பது உங்கள் கைகளில்தான் தங்கியுள்ளது.

தமிழ் ஒலி — ஒளி.

## மூடு மந்திரம்!

நோர்வே நகரொன்றில் தமிழ் திருமணச்சடங்கொன்று வெகு விமரிசையாக நடந்துகொண்டிருந்தது.
தமிழ்ச்சடங்கினை காண நோர்வே வெள்ளை இன நண்பர்களும் ஆவலுடன் கலந்து கொண்டனர்!
சகல சடங்கு முறைகளையும் பொறுமையோடும், சிறிது சிறிதான குழப்பங்களுடனும் கேட்டு அறிந்து கொண்டிருந்த அவர்கள், ஐயர் மந்திரம் சொல்லி, சடங்கை நடத்திக்கொண்டிருக்கும் போது, எவருமே அக்கறை கொள்ளாது தமக்குள் கதைத்துக்கொண்டிருந்ததை சகிக்கமுடியாமல் ஆவேசத்துடன் ஏன் உங்கள் தமிழர்கள் இப்படி மரியாதை இல்லாது நடந்து கொள்கின்றனர்? என்று ஒருவர் கேட்டார்.
ஐயா! மந்திரம் சமஸ்கிருதத்தில் போகிறது. எமக்கு சமஸ்கிருதம் அறவே தெரியாது என்று பதில் சொன்னபோது அவர்களது விழிகள் விழுந்துவிடுமளவிற்குப் பிதுங்கியது.

- மைதிலி

www.tamilarangam.net



# எச்சில் போர்வை

## – ஒரு பார்வை

கடுகைத்துளைத்து ஏழ்கடலைப்புகுத்தி
குறுகத்தரித்த குறள்.
என திருக்குறளின் சிறப்பைப் பாராட்டுவார்கள்.
அப்படித்தான் படம் எடுக்கிறோம் என பல காய்களை நறுக்கிப்போட்டு சாம்பார்வைத்து காய்களின் தனித்தன்மையோ சுவையோ தெரியாமல் ஆக்கிவிடுவதுபோல் அல்லாமல் குறும்படம் தயாரிப்பது வளரும் நம் திரைப்படைப்புக்களுக்கு சிறந்த படிக்கல்லாகும்.

அந்தவகையில், சுவிஸ் ஜீவன் வீடியோ மூவிஸ் வழங்கிய எச்சில் போர்வை தன் இலக்கை வெற்றிகரமாக சென்றடைந்தது என்பது பாராட்டுக்குரியதாகும்.

ஊரிலிருந்து கனவுகளுடன் வந்திறங்கும் நம்மவர்கள் புலம்பெயர்ந்த நாடுகளின் நிதர்சனத்தை தரிசிக்கும்போது! விசா — வேலை — இருப்பிடம் எனப்படும் திண்டாட்டமும் அதைப்புரிந்துகொள்ளாமல் தாய்மண்ணில் கோட்டைகட்டும் உறவினர்களும் — வந்த இடத்தின் மொழியும் புரியாமல், வழியும் புரியாமல் திகைக்கும் சூழ்நிலையில், தான் தேடிப்போர்த்துக்கொண்டது நிரந்தரமானதல்ல என்ற உண்மையின் உறைப்பு அழுத்த கால்போன போக்கில் நடக்கும் நம் — நாயகன் போவதை நம் புலம்பெயர்ந்த வாழ்வின் அன்றாட அவஸ்தையில் நம்மை ஒன்றிவிடச்செய்கிறது எச்சில் போர்வைகள். இப்படத்தை நெறிப்படுத்திய ஜீவனையும் ஒலி ஒளி நடிப்பு என பங்களிப்புச்செய்த கலைஞர்களையும் பாராட்டலாம். இந்த வகையில் நம்மவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர்ந்தால் உலகில் ஈழத்தமிழனின் கலைப்படைப்புக்கள் விரைவில் முன்னிலை வகிக்கும் எனத் தாராளமாகக்கூறலாம்.

— ஏ. இரகுநாதன்

(தமிழ் ஒளியில் ஒளிபரப்பான நம்மவர் படைப்புக்களில் எச்சில் போர்வை ஒரு தனியிடத்தைப்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது)



## நேருக்கு நேர்

**பிரதி வெள்ளி தோறும் ஒளிபரப்பாகின்றது.**

## எட்டாம் திருவிழா

...வெளிநாட்டில் வாழ்பவர்கள் எல்லாம் நல்ல வசதியாக வாழ்கிறார்கள் என்று ஊரிலிருப்பவர்கள் எம்மைப்பார்த்துப்பெருமைப்படலாம். அல்லது பொறாமைப்படாலாம். ஆனால் எமது மன வெப்பியாரங்களை யாரிடம் சொல்வது? இடையிடையே காதில் வந்து மோதிக்கொள்ளும் தமிழ் ஒலியின் நாடகங்கள் பல எம்மை இன்னும் ஏங்கவைத்து விடுகின்றன. பசுமையான நினைவுகள் மீள மீள வந்து வதைக்கின்றன.

திருவிழாக் காட்சிகளும், அர்த்தமில்லாத பழைய சண்டைகளும், லௌஸ்பீக்கரைக்கட்டி விட்டு எம்ஜீஆர் சிவாஜி சண்டைகளும் எவ்வளவு தான் சின்னத்தனமான விசயங்களாயிருந்தாலும் அந்த வாழ்க்கை எம்மை ஏங்க வைக்கத்தான் செய்கின்றது. தமிழ் ஒலியில் ஒலிபரப்பான அப்புக்குட்டி அண்ணரின் எட்டாம் திருவிழா நாடகம் எம்மை அப்படியே பழைய வாழ்க்கைக்கு அழைத்துச்சென்றது. சோளகம் சுழன்றடிக்க ஊரில் திருவிழா ஒன்றில் நின்றது' போன்ற ஒரு உணர்வு.
வாழ்க உங்கள் சேவை!

**- தனபாலசிங்கம் (ஜேர்மனி)**

**பிரதி வெள்ளிக்கிழமைகளில் ஒளிபரப்பாகின்றது.**






**பிரதி சனிக்கிழமைகளில்**
**ஒளிபரப்பாகின்றது.**

## கல்லானாலும் மனைவி

கல்லானாலும் கணவன்
அந்தக்கல்லில்
இதயத்தைத்தேடி தேடி
தோற்றுப்போய்விட்டாள்
அதனால் அவளும்
கல்லாகி போனாள்
இனி அவளும்
கல்லானாலும் மனைவி

• நந்தினி

**பிரதி வெள்ளிக்கிழமைகளில்**
**ஒளிபரப்பாகின்றது.**




## லண்டன் கலைக்கதம்பம் ...



*லண்டனில் வாழும் இளைய தலைமுறைக் கலைஞர்களின் கலை வெளிப்பாடுகளை ஐரோப்பிய தமிழர்களும் கண்டுகளிக்க வகைசெய்யும் ஒரு தொகுப்பு நிகழ்ச்சி.*
*புலம்பெயர்ந்து அந்நிய மண்ணில் பல்வேறு கலாச்சார பின்னணிகளுக்கு மத்தியில் வாழும் நமது குழந்தைகள் இன்று தமது அடையாளங்களை மறக்காது வாழ்கின்றனர். வாழ முயற்சிக்கின்றனர்.*
*அவர்கள் மத்தியில் கலை உணர்வை வளர்க்க உதவும் இந்நிகழ்ச்சியை பிரபல ஒலிபரப்பாளரும் எமது இயக்குனர்களில் ஒருவருமான விமல் சொக்கநாதன் தயாரித்து வழங்குகின்றார். பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நண்பகல் 12.30 மணிக்கு (லண்டன் நேரம் 11.30 மணி) இந்நிகழ்ச்சி ஒளிபரப்பாகின்றது.*

## ஐரோப்பிய நாடுகளில் ஒளிப்பதிவு

தமிழ்ஒளி தொலைக்காட்சியில் புலம்பெயர்ந்த கலைஞர்களின் நிகழ்ச்சிகள் இல்லையே என்ற குறையைப் போக்க தமிழ்ஒளி தயாராகிவருகிறது.

ஐரோப்பிய நாடுகள் எங்கும் பரவி வாழும் நம் கலைஞர்கள் வாழும் நகரங்களுக்குச் சென்று அவர்தம் படைப்புக்களை ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நமது கலைஞர்கள் தமது கலைப்படைப்புக்களை ஐரோப்பா எங்கும் வாழும் நமது மக்கள் கண்டு இன்புற இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளலாம்.

சூரிச் (சுவிஸ்), டோட்மூண்ட் (ஜெர்மனி), லண்டன் (பிரிட்டன்) ஆகிய நகரங்களில் விரைவில் நடக்கவிருக்கும் ஒளிப்பதிவில் கலந்துகொள்ள விரும்பினால் தொடர்பு கொள்ளுங்கள்:

பேரின்பம்- சூரிச் - 01 291 4652
யேசுதாசன்-ஜெர்மனி- 02921 72620
ராஜகோபால்-லண்டன்- 0181 767 8004

www.tamilarangam.net

# TRT (Tamil Radio & Television)

Radio Asia S.A
தலைமை அலுவலகம்
**79 Rue Rateau**
**93120 La Courneuve**
France
Tel : 01 43 11 27 77
Fax : 01 43 11 27 72

**லண்டன் :**
727 B London Road
Thornton Heath,
Surrey CR 7 6AM
Tel : 0181 683 4445
Fax : 0181 683 2645
38, Moffat Road,
London SW17.
Tel: 0181/ 767 8004

**சுவிஸ்**
Post Box . 4105 Augst,
Tel: 061 813 1552
Hohl Str 78 8004 Zurich
Tel : 01 291 4652

**ஜெர்மனி :**
Grosser Sand Weg 63
59065 Hamm

Tel : 02381 675049

# சற்றலைற் பொருத்துனர்கள்

**France**
**தமிழாலயம் :** 01 42 05 71 49
**குமரர்ஸ் சொப் :** 01
**பொபி :**

**Germany**
**யோகன் :** 02381- 675049
**கனீந்திரன் :** 0202741937
**செல்லத்துரை :** 0634392287

**Denmark**
**யோகேஸ்வரன் :** 98433597
**சன்ட்ராஸ் :** 74458780

**Norway**
**கிருபா :** 22175602
**ஏசியன் சென்றர் :** 4778987890

**London**
**சிறி :** 0181 7676440
**ஜெயகாந்தன் :** 0181 6721008
**பற்குணம் :** 0181 2401863

**Swiss**
**ஏசியன் என்ரபிறைஸ் :** 01 12914637
**அம்ஸ் :** 061 761 1435
**மூர்த்தி மாஸ்ரர்:** 061 813 15 52

**Holland**
**குணா :** 226 318746
**செல்வராஜா :** 0475340493
0654645660

www.tamilarangam.net



KTC
CHANGE

193 rue du Fg. St. Denis,
75010 PARIS
Mo: Gare du Nord / La Chapelle
Tel: 42 05 41 36

❁ எந்தவித கொமிஷனும் இல்லாமல்
உள்நாட்டு - வெளிநாட்டு
நாணயங்களை மாற்றீடு செய்வதற்கும்,
❁ தங்க நாணயங்களை மிகக் குறைந்த
விலையில் பெற்றுக்கொள்வதற்கும்

நங்கையர் மனங்கவரும் நல்ல
தங்க நகைகளை நம்பிக்கையோடு
றெடிமேட்டாகவும் செய்தும் பெற்றுக்கொள்ள

கே.ரி.சீ ஜூவல்ஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்